வெகுதானிய தை

# சைவநீதி

சைவ வளர்ச்சி கருதிய செய்தி தரும்
மாத இதழ்.



ரூபா 20/-

உ

சிவமயம்

# சைவநீதி

## பொருளடக்கம் :


1. அரன் நாமம் நவில்கிலாதார். – ஆசிரியர் 1

2. சாத்திரமும் தோத்திரமும் - பதிமுதுநிலை, தோடுடைய செவியன். – மா. வே. நெல்லையப்பப்பிள்ளை பி.ஏ 2

3. திருத்தொண்டர் புராண சூசனம் எழுதப்பட்டமை – க. சுவாமிநாதன் 5

4. சிவாலயச் சூழல் சிவமயமாக வேண்டும். – இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா 6

5. இரட்டை விலங்கு – கி. வா. ஜகநாதன் 13

6. ஒழுக்கமுடன் வாழ்வதால் என்ன பயன். – ஆசாரக் கோவை 16

7. திருவாசகச் சிந்தனை : திருப்பூவல்லி – பண்டிதர் சி. அப்புத்துரை 17

8. சைவ ஆசாரம். - முருக வே. பரமநாதன் 20

9. சமரச சுத்த சைவம். – சைவநன்மணி செல்லப்பா 22

10. கண்ணப்பநாயனார். – சிவசண்முகவடிவேல் 26

11. திருவிளையாடற் புராணம் : மலையத்துவசனை அழைத்தமை - கூடலான் 29

12. விளக்கு – திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் பி. உ. அட்டையில்


சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக்
கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர் – இதழ் நிர்வாகிகள்.

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவநீதி

மலர் 2 வெகுதானிய தை சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 10

கௌரவ ஆசிரியர்
சைவப்புலவர்மணி
வித்துவான்
திரு. வ. செல்லையா

நிர்வாக ஆசிரியர்
திரு.செ. நவநீதகுமார்
42. ஜானகி லேன்,
கொழும்பு 04.

பதிப்பாசிரியர்
திரு. மு. கௌரிராஜா.

## அரன் நாமம் நவில்கிலார்

"இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என்றார் நாவலர் பெருமான். மன, மொழி, மெய்களால் இறைவனை வழிபடல் வேண்டும்.

மனத்தினாலே அவனைத் தியானிக்க வேண்டும். வாக்கினாலே அவன் திருநாமத்தை, ஐந்தெழுத்தை ஓத வேண்டும். திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில், தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றரே என்பர் அப்பரடிகள்.

இறைவன் நாமத்தை நாவினால் நூறு நூறாயிரம் தரம் ஓதியவர்கள் பாவ மெல்லாம் தீர்ந்து இந்திரனிலும் உயர்ந்த செல்வர்களாக விளங்குவார்கள். இறைவன் நாமத்தெழுத்தைந்தையும் நினைத்திருப்போர்க்கு ஒரு போதும் துன்பமில்லை. "சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமொரு நாளுமில்லை" என்பது ஔவைப் பிராட்டியார் வாக்கு. இறைவனிடம் அன்பு பூண்டொழுகுபவர் நா எப்போதும் அவன் நாமத்தையே நவிலும். "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றும், வழுக்கி வீழினுன் திருப் பெயரல்லால் மற்று நானறியேன் மறுமாற்றம்" என்றும் சுந்தரமூர்த்திநாயனார் பாடுவர்.

மலர்களைக் கையினாற் றூவிச் சிவபெருமானின் பொற் பாதங்களை அர்ச்சிக் காதவர்களும் நாவினால் இறைவனின் திருநாமம் ஐந்தெழுத்தையும் ஓதாதவர்களும் தமது உடலுக்கு இரைதேடித் துக்கத்திலாழ்ந்து இறுதியில் காகத்திற்கு இரையாகிக் கழிவர்.

*பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்*
*நாக்கைக் கொண்டரன் நாமம் நாவில்கிலார்*
*ஆக்கைக் கேஇரை தேடி அலமர்ந்து*
*காக்கைக் கேஇரை ஆகிக் கழிவரே*

*- அப்பர் -*

# சாத்திரமும் தோத்திரமும்

## பதிமூது நிலை - தோடுடைய செவியன்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறி யோர்தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மா னிவனன்றே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை :**

தோட்டினை அணிந்த காதை உடையவனாய் எருதின்மேல் ஏறியிருந்த, தூய்மையும் வெண்மையும் உடைய ஒரு திங்களை அணிந்து, சுடுகாட்டிலுள்ள திருநீற்றை அணிந்து, எனக்குத் தெரியாமல் என் உள்ளத்தில் இருந்து கொண்டு என்னைத் தன் வயப்படுத்த முயன்று கொண்டவனாகிய சிவபெருமான், இதழ்களை உடைய பூக்களால் பண்டைப் பிறவிகள்தோறும் தாழ்ந்து வணங்கிய காரணத்தால், அடிமையாகக் கொண்டருளின, சிறப்பினை உடைய சீகாழியில் எழுந்தருளியிருக்கிற ஆண்டவன் இதோ என் கண்முன் தோன்றுகிற இவனே.

### விளக்கவுரை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்க்குச் சீகாழிக் கோயில் பிரமதீர்த்தக் கரையில் தோணியப்பர் உமாதேவியாரோடும் எழுந்தருளிச் சிவஞானங் குழைத்த திருமுலைப்பாலை உண்பிக்க, அவர் வாயிலிருந்து வடிந்த பாலை அவர் பிதாவாகிய சிவபாத இருதயர் அத்தீர்த்தத்தில் முழுகி நியமமுடித்து வந்தபொழுது கண்டு "எச்சில் மயங்க, இப்பாலை ஊட்டினவர் யாவர்?" எனக் கேட்டார். அவ்வாறு கேட்ட காலத்தில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் "எனக்குப் பாலை ஊட்டியவர் இதோ வான் வெளியில் எருதின்மேல் உமாதேவியாரோடும் எழுந்தருளியிருக்கிற சிவபெருமானே". என்று தமது சிறு விரலாற் சுட்டிக் காட்டியபொழுது பாடிய தேவாரப் பதிகத்தில் முதலாவது பாட்டு இது.

தோடு பெண்கள் அணிந்துகொள்கிற காதணி. இங்கே இது சிவபெருமானுடைய இடது காதணியைக் குறிக்கின்றது. சிவஞானம் குழைத்த திருமுலைப் பாலைத் தாம் உண்ணும்படியருளிய உமாதேவியாரது திரு உருவத்தை நாயனார் குறிக்கின்றார். (சிவன் கூட்டிவந்து ஏவிய முறையே நாயனார்க்கு உமாதேவியார் சிவஞானப் பாலை ஊட்டினார்) நாயனார், தமது தந்தையார்க்கு தம்மைப் பால் உண்பித்தவர் சிவபெருமானே என்று சுட்டிக்

காட்டுகின்றார். இது உண்மை நிகழ்ச்சியாயிருத்தலோடு சிவபெருமானுக்குத் துதியாயும் இருத்தலினாலே அத்துதியைச் சிவபெருமான் திருச்செவியேற்று அருளுமாறு "தோடுடைய செவியன்" என நாயனார் சிறப்பித்தார். அருள் வடிவினர் ஆகிய உமாதேவியாரே உயிர்கள் கூறும் குறைகளைக் கேட்டு, அவைகளைப் பிறவித் துன்பத்தினின்றும் நீக்கிச் சிவத்தோடு சேர்த்துப் பேரின்பம் அடையச் செய்தலால், நாயனார் சிவபெருமான் திருமேனியில் இடப்பாதியாகிய உமாதேவியார் பாகத்தில் உள்ள இடது காதினைச் சிறப்பித்தார்.

இத்தேவாரம் தமிழ்மறையின் முதாவது பாட்டு. ஆதலின், நாயனார், வேதாகமங்கள் முதலிய எல்லாக் கலைகளின் பொருள்களும் அடங்கியுள்ள பிரணவத்தைத் "தோடு" என்னும் முதல் மொழியில் உள்ள "ஓ" காரமாக முதலில் அமைத்துக் கூறினார் இப்பிரணவநாதம் தகராகாசம் எனப்படும். அது அறிவு வெளியிற் தோன்றும் சுத்தநாதம் ஆதலில் 'த்' கர ஒற்றுடன் 'ஓ' காரத்தைக் கூட்டித் "தோ" என்று உரைக்கப்பப்பட்டது. பிரணவ முதலெழுத்தாகிய இந்த 'ஓ' காரமானது பன்னிரண்டாவது திருமுறையாகிய பெரிய புரணத்தில் ஈற்றுச் செய்யுள் ஈற்றடியின் ஈற்று மொழியின் ஈற்றெழுத்தாகிய மகர ஒற்றோடு புணர்ந்து " ஓம் " என முடிந்து நிற்கின்றது. இதனால் தமிழ் மறைகள் எல்லாம் பிரணவமாகிய அஞ்செழுத்து மந்திரத்திலே தோன்றி அடங்கி நிற்கும் தன்மை உணர்த்தப்பட்டது.

விடையேறி – ஊழிக்காலத்து அறக்கடவுள் இறைவனைத் தொழுது பிறப்பு இறப்பு இல்லாது என்றும் நிலவும் தன்மையை வேண்டிய பொழுது இறைவன் அறக்கடவுளை வெள்விடையாக்கி அதன் மேல் ஊர்ந்தருளுகிறார். இதுவே விடையேறிய நிகழ்வு. இது சிவபெருமானது படைப்புத் தொழிலை உணர்த்தும். இவ்வரலாறு, இறைவன் அறவடிவினன் அறவழி என்னும் உண்மையையும்; அறவழி நின்று அறம் புரிகின்ற இயல்பினை உடையவர்களே இறைவனை அடைவர் என்னும் உண்மையையும் உணர்த்துகின்றது.

தூவெண்மதி சூடி – தக்கனால் அடைந்த சுடு மொழிக்கு (சாபத்துக்கு) ஆற்றாத திங்கள் வானவன், இறைவனைச் சரண் புகுந்து தனக்குரிய துன்பம் துடைத்தாள வேண்டினான். இறைவன் திங்களின் துன்பம் துடைத்து தன் திருமுடியில் அவனையேற்றினான். இதுவே திங்கள் சூடிய வரலாறு. துன்பத்தில் என்றும் காத்த தன்மையால், இது இறைவனது 'காத்தல்' என்னும் தொழிலைக் காட்டுவதாகும்.

காடுடைய சுடலைப் பொடி பூசி – மகாசங்கார காலத்தில் நிவர்த்தி கலை முதலிய ஐந்து கலைகளினாலும் அடங்கி உள்ள எல்லாப் புவனங்களை (உலகுகளை) யும் அழித்து நடனம் செய்யும் இடமே இங்கு "காடுடைய சுடலை" எனப்பட்டது. அவ்விடத்துக்கிடந்த சாம்பரே "பொடி" எனப்பட்டது. இந்தப் பொடியே, தன்னைத் தொழுது எழுவார் வினைவளம் நீறு எழ, இறைவன் தனது திருமேனியில் அணியும் திருநீறாகும். சைவர்கள் தம்மைச் சார்ந்து பிணிக்கிற மலத்தை நீறாக்கும் கருத்துக்குறியாக அணிந்து கொள்கிறது இந்தத் திருநீற்றையே. சுடலைப் பொடி இறைவனது "அழித்தல்" தொழிலைக் குறிக்கின்றது. "காடுடைய சுடலைப் பொடி" என்பதைச் " சுடலைக் காடுடைய பொடி" என மாற்றுக. சுடு + அல் + ஐ = சுடலை. சுடு பகுதி, அல்லும் ஐயும் தொழிற் பெயர்விகுதிகள் காடு =

இடம். சுடு – காடு – சுடுகின்ற இடம் –பிணம் சுடுகின்ற இடம் சுடலை.

என் உள்ளம் கவர் கள்வன் – உள்ளம் என்பது மனம்; ''சிந்தை என்பதும் அது''. உயிர் என்னும் பொருளும் கொள்ளும். ஆனால் ''அந்தமும் ஆதியுமில்லா அரும் பொருள் சிந்தையில் மேவித் தியக்கு அறுத்தல் வேண்டும்.'' (திருமந்திரம் 2963) என்பது கூறப்படுதலின் கட்டு நிலையிலுள்ள உயிர்கட்கு அப்பொருள் பொருந்தாது. உயிர்கள் தன்னை அடைந்து பேரின்பம் நுகரும் பொருட்டுப் பக்குவப்படுத்த வேண்டித் திரோதான மலத்தின் வழிநின்று மறைத்து இறைவன் அவைகள் வேண்டிய போகங்களை ஊட்டி உண்பிக்கின்றான். உயிர்களது இந்தக் கட்டுநிலை காலத்தில் இறைவன் உயிர்களுடைய உள்ளத்தில் அவைகள் அறியதவாறு நிறைந்து கலந்திருப்பதால் ''கள்வன்'' என்று கூறப்பட்டான். ''நினைத்தவர்கள் நெஞ்சுளாய் வஞ்சக் கள்வர்'' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திருவானைக்காத் திருத்தாண்டகப் பாட்டொன்றிற் கூறியிருத்தல் காண்க. ஆதலின் ''என் உள்ளம் கவர் கள்வன்'' என்பது இறைவனுடைய ''மறைப்புத் தொழிலைக்'' குறிக்கின்றது.

கவர்தல் = வயப்படுத்தல். உயிர்களுடைய பக்குவத்துக்கு ஏற்ப அவைகளின் வினைப்பயனாக உலக இன்பத்தையும் துன்பத்தையும் நுகர்வித்துப் பக்குவப்படுத்தித் தன்வயப்படும் படி இறைவன் செய்கிறான். இவ்வாறு உயிர்கள் அறியாதபடி அவைகளைத் தன்வயப்படுத்துதல் இங்கே ''கவர்தல்'' எனப்பட்டது.

''கவர் கள்வன்'' என்ற சொற்களினால் அகப்பொருட்டுறை கூறப்பட்டதெனினும் பொருந்தும். அகப்பொருட்டுறையில் உயிர் தலைவியாகவும் இறைவன் தலைவனாகவும் உருவகம் செய்யப்படுகிறார்கள்.

''முனைநாட்பணிந்தேத்த'' என்றதனால் வினைப் பயனால் அன்றிச், சிவபாதவிருதயர் கோரியபடி அருட்பணி செய்யவே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அவதரித்தார் என்பது குறிப்பிடப்பட்டது. பிரமதேவன் பூசித்த செய்தியைக் கொள்வாருமுளர்.

''அருள்செய்த '' என்பது இறைவனது ''அருளல்'' என்னும் தொழிலைக் குறிக்கிறது. இறைவன் உயிர்களுக்கு முடிவில் இந்த ''அருளல்'' ஆகிய தொழில் செய்யும் பொருட்டே மறைப்புத் தொழிலையும் அதனுள் அடங்கிய படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் தொழில்களையும் அவைகளுக்குப் பக்குவம் வருவிக்கும் பொருட்டே செய்கிறான். ''அருள், செய்த பெம்மான்'' என முடிக்க. ''பெம்மான்'' என்பது பெருமான் என்ற சொல்லின் மரூஉ. பெருமான் – தலைவன் – ஆண்டான் – கணவன், அன்று ''ஏ'' அசைநிலைகள். இப்பாட்டில் ''விடையேறி'' ''மதிசூடி'' ''சுடலைப் பொடி பூசி '', ''என் உள்ளம் கவர் கள்வன்''. ''அருள் செய்த பெம்மான் என்ற ஐந்து சொற்றொடர்களாலும் முறையே இறைவனுடைய ஐம்பெரும் தொழில்களும் குறிக்கப்பட்டன. இத்தொழில்கள், திருவருட்பயன் ''பதிமுது நிலை'' என்னும் அதிகாரத்தில் ''ஆக்கி எவையும் அழித்து, ஆசுடன் அடங்கப், போக்கும் அவன் போகப் புகல்'' என்ற நான்காவது திருக்குறளாற் கூறப்பட்டன.

*நன்றி : தேவார அருள் முறைத்திரட்டு*

*உரும்பிராய்*

## அருள்மிகு கருணாகரப் பிள்ளையார் மஹா கும்பாபிஷேகம்



உரும்பிராய் அருள் மிகு கருணாகாரப் பிள்ளையார் மஹா கும்பாபிஷேகம் எதிர் வரும் 1999.07.07 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடை பெறவுள்ளது கும்பாபிஷேகம் சிறப்புற அமைய விநாயகன் அருளை வேண்டி நிற்கின்றோம்.

- சைவநீதி நிர்வாகம் -

# திருத்தொண்டர் புராண சூசனம் எழுதுப்பட்டமை

தெய்வநலஞ்சான்ற சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த பெரியபுராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம் பக்தியையும் ஞானத்தையும் பயக்கும் நூல். தனியடியார் அறுபத்து மூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத்திருவருடைய வரலாறுகளையும், அவர்தம் பெருமைகளையும் தெளிவாக்கும் நூல். அதனால் சைவர்கள் யாவரும் இதனைக் கற்றுணர வேண்டி, கற்றோரும் மற்றோருமாகிய யாவருக்கும் பயன்படும் பொருட்டுப் பெரியபுராணத்தை அழகிய வசன நடையில் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள் 1852 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டார்.

பெரியபுராணத்தை அச்சிடும்போதே பெரியபுராண சூசனத்தையும் எழுதத் தொடங்கி விட்டார். அப்போது அவருக்கு வயது இருபத்தெட்டாகும். சூசனம் என்பது வரலாறுகளால் வலியுறுத்தப்படும் கருத்துக் கோவையாகும். அவர், 'சைவ சாஸ்த்திரங்களான சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருக்களிற்றுப்படியார், திருவருட்பயன், நெஞ்சுவிடுதூது, கொடிக்கவி, சிவப்பிரகாசம் முதலிய நூல்களைத் தாமே கற்றுணர்ந்தார். சிவபெருமான் அருளிச்செய்த முதனூல்கள் வேதசிவாகமங்கள். அவற்றில் வேதம் பொதுநூல்; ஆகமம் சிறப்புநூல். சிவாகமத்தைச் சமஸ்கிருத நூல்களிலிருந்து வாசிக்கவும், அவற்றின் பொருளை ஐயம் திரிபற விளங்கவும், தாமே கற்றுக் கொண்டார். வேதசிவாகமாதி சமஸ்த சாஸ்திரங்களின் உண்மைப் பொருளைத் தம்முள் அடக்கிய தமிழ் நூல்கள் தேவார திருவாசகங்களே என்று அவற்றையும் கற்றுணர்ந்தார்' என்று திரு. கைலாசபிள்ளை தம் 'ஆறுமுக நாவலர் சரித்திரம்' என்ற நூலில் தெரிவிக்கிறார். இதனை, நாவலரவர்கள் தம்முடைய கூற்றுக்கு மேற்கோளாகக் காட்டும் நூல்களிலிருந்து நன்கு உணரமுடிகிறது. அவர் கற்ற நூல்கள் கணக்கில. அவற்றின் சாரத்தைப் பிழிந்து சூசனத்தை எழுதியுள்ளார்.

*நன்றி : திருத்தொண்டர் புராண சூசனம்*

# சிவாலயச் சூழல் சிவமயமாக வேண்டும்



இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா



தமிழராகிய எமது சமயம் சைவம். அதன் சார்பாக எதிர்பார்க்கப்படும் உன்னதப் பேறு சிவமய விளைவு. தமிழர் பாரம்பரியம் இதை உன்னதப் பேறாகக் கொண்டிருந்தமைக்கு ஆதாரம் உண்டு. தமிழர்களால் எழுதப்படும் நூல்கள், ஆவணங்கள் பத்திரங்கள் எல்லாவற்றிலும் சிவனது முதற்படைப்பாகிய விந்துவைக் குறிக்கும் சுழியும் நாதத்தைக் குறிக்கும் கீறும் ஒன்றிய வடிவான பிள்ளையார் சுழி இட்ட கையோடு சிவமயம் கண்டிப்பாக எழுதப்படும் வழக்கம் இருந்திருத்தல் கண்கூடு.

கடல் உள்ளவரையும் அதிற் குமிழிகள், நுரைகள், அலைகள் தோன்றாதிருக்க முடியாமை போல உலகம் உள்ளவரை மக்கள் மத்தியில் ஆசாபாசமயம், மோஹமயம் இவை எல்லாம் படைப்புக்கு மூலமாகிய மாயையின் விகாசங்கள். ஆதலால் இவை தங்கள் குணமாகிய மயக்கத்தை விளைக்காதிருக்கவும் முடியாது. மக்களினம் அவற்றுக்கு ஆட்பட்டு விடும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகாமல் இருந்து விடவும் முடியாது. அதேவேளை, அவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டிருக்கும் அளவும் மக்கள் தமது நிரந்தரத் தொல்லை ஆகிய பிறப்பு இறப்புக் கொடுமையில் இருந்து மீட்சிபெறவும் முடியாது.

இத்தர்ம சங்கடமான நிலைக்குள்ளான உயிர்களுக்கு விமோசனம் அளிக்க வேண்டிச் சைவம் கண்ட ஒரே ஒரு மார்க்கம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாராற் கடைப்பிடிக்கப் பெற்றிருப்பது, அவருக்கு வழங்கும் "சிவம் பெருக்கும் பிள்ளையார்" என்னும் பெயரால் இனிது விளங்கும். இவர் போல்வார் அடுத்தடுத்துத் தோன்றுவதும் நிரந்தரமாகத் தொடர்ந்து இருப்பதும் ஆகுங் காரியங்கள் அல்ல. இக் கைங்கரியம் சமூகத்தில் தொடர்ந்தேர்ச்சியாகச் சரியான முறையிற் சாத்தியமாவதற்கு ஏற்ற இடமாகச் சைவ ஆலயம் அமைகிறது. சைவ ஆலயத்தில் நித்திய, நைமித்தியம் என்பவற்றால் நாளிலும் பொழுதிலும் தேக்கப்படும் சிவமயம் தன் பிரபாவத்தால் சமூகத்துட்புகுந்து மேற் குறித்த லௌகிக மயங்களை மழுங்கடிக்க அதனால் சமூகம் சுபீட்சம் அடைய வேண்டியது முறையாகும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனவும், "கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" எனவும் எழுந்த அறிவுரைகள் இது சார்பானவையே. தமது தேவாரம் ஒன்றில் இதற்கு அழுத்தம் கொடுத்து உரைக்கும் அப்பர் சுவாமிகள், "ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்......... அவை எல்லாம் ஊரல்ல அடவி காடே." என இதனை ஊரிலட்சணத்தில் அமைத்துப் பேசி உள்ளமை கருதத்தகும். ஆலயம் தொழா மக்கள் வாழும் ஊருக்கு ஊரிலட்சணம் இல்லை. அது வனாந்தரக் காடாகவே இருக்க முடியும் என்று இவர் கூறுவதன் தாற்பரியம் யாதாகலாம்.

காடு வேடர் ஆதிக்கத்தில் உள்ள பகுதி. துஷ்ட மிருகங்களின் அட்டகாசம் உள்ள பகுதியுமாம். வேடர்க்கு இயல்பான தொழில் துன்புறுத்தலாம். சைவஞான நோக்கில் மக்களை உலக வாழ்வில் வைத்து ஆட்டி அலைக்கும் ஐம்புலன்களை வேடர்கள்

என உருவகப்படுத்திக் கூறுதல் வழக்கம். ஆலயம் விளக்கும் சிவமயம், தன்னிடத்தில் நுழைதற்கு வாய்ப்பில்லாத ஊரில் இந்த ஐம்புல வேடர்களின் செயற்பாடுகளே மிஞ்சி இருக்கும். இச்சை, மயக்கம் போல்வனவாகச் சொல்லப்படும் இந்த ஐம்புல வேடர்களின் செயற்பாடுகளே மேற்குறித்த ஆசைமயம், சுயநலமயம், உழைப்புமயம், பணமயம் முதலான அனைத்து மயங்களுமாம். எனவே ஆலயத்தால் சிவமயம் பெருக்கப்படாத ஊர், காட்சி அளவுக்கு ஊராக இருக்கலாமே அன்றிக் கருத்தளவுக்கு அது காடே தான் என்பது அதன் தாற்பரியமாம்.

நமது முகத்துக் கண்ணாற் காணும் காட்சி ஊனக்காட்சி. அதற்கு இந்த ஐம்புலக் கொடுமைகள் புலப்படுவது இல்லை. அவ்வகையிலான சில வருமாறு:

*"ஐம்பெரும் மாபூதங்கள்*
*ஒருவீர் வேண்டிற்றொருவீர் வேண்டீர்*
*ஈண்டிவ்வுலக மெல்லாம் உம்பரமே*
*உம்வசமே ஆக்குகின்றீர்."*

*"முள்வாய தொழிற்*
*பஞ்சேந்திரிய வ ஞ்சமு கரிகாள்*
*முழுதும் இவ்வுலகை ஓடி நாள்வாயும்*
*உம் முடைய மம்மராணை நடாத்துகின்றீர்."*

*"விரைந்தாழும் நல்குரவே செல்வே (செல்வமே)*
*பொல்ல வெகுட்சியே, மகிழ்ச்சியே, வெறுப்பே நீங்கள்*
*விரைந்தோடி இவ்வுலகை*
*அரித்துத் தின்பீர்."*

இப்படியான ஞானக்காட்சி விளக்கங்கள் எல்லாம் அத் தாற்பரியத்துக்கு மேலதிக அத்தாட்சிகளாம். எனவே, சிவமயம் ஒன்றல்லாத ஏனைய மயங்கள் அனைத்தும் தம்மியல்பில் தீங்கானவை. சிவமயத்தாற் பரிகரிக்கப்பட்டாக வேண்டியன என்பது மறுக்கொணாத உண்மை ஆகின்றது.

இன்றைய சூழ்நிலையிலும் பலரும் பலகாலும் இவ்வுண்மையின் நிலைபற்றிப் பிரலாபித்துக் கொள்ளுதல் பழக்கப்பட்டுப் போன ஒருவழக்கமாகவும் இருந்து வருகிறது. இதனை உற்றுநோக்கி உள்நுழைந்து உசாவிப்பார்த்தால்:

சமூகத்தில் நுழைந்து சமூகப்பழுதுகளைத் தீர்த்து நலம் விளைக்க வேண்டிய அரச நீதியும், சமூகப் பழுதுகள் நுழைந்து அரச நீதியை விபரீதமாக்குவது போல, ஆலயம் பிரதிபலிக்க வேண்டிய சிவமயத்துள் ஆசைமயம், உழைப்புமயம், அதிகாரமயம், அறியாமைமயங்கள் போன்ற லௌகிக மயங்கள் புகுந்து விபரீதம் விளைக்கும் நிலை இருந்து கொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

ஆலயத்தை இடமாகக் கொண்டெழும் இச் சிவமயம் வெறுமனே பூசகர் மட்டில் மாத்திரம் அமைவதன்று. அதற்கு அவர் பிரதான பாத்திரம் என்னும் அளவே இதில் அவர் பங்காகும். அவரது பேச்சு, செயற்பிரபாவங்களினால் இது அங்கே பூசை அபிஷேகம் செய்விப்பவர் பூசைக் கைங்கரி யங்களுக்குத் தொண்டர்களாக நின்று உதவுபவர்கள், வழிபாட்டாளர் அனைவருமே இதற்குப் பாத்திரர் ஆவர்.

அபிஷேகம் பூசை செய்யும் பூசகர் சாதாரண சந்தியாவந்தன அனுட்டானசுத்தி செய்த பின்னரும் சிவபூசை செய்து தமது அகப்புறச் சுத்திகளை உறுதிப்படுத்திக் கொண்டு அதன் மேலும் மந்திரபாவனை சகிதமான பஞ்ச சுத்திகள் செய்து கொண்டே பூசைக் கிரியைகளில் ஈடுபடுகின்றார். அவரது பிரபாவத்தால் அவர் தம்மோடு இயைத்துக் கொள்ளும் உபயகாரருக்கும் தற்காலிகமாகவாவது இவை உளவாகும் வாய்ப்பு உண்டு. அதை ஏற்பதற்கான அடிப்படைத் தகுதி இவருக்கும் வேண்டி உளதே. இவரும் தனது ஸ்நான சுத்தியோடு குறைந்த பட்சம் சைவ அனுஷ்டான சுத்தியாவது பெற்றிருத்தல் அவசியமாம். சைவ அனுட்டானக் கிரமத்தால் உளதாகும் அகப்புறத் தூய்மை அவரை அதற்குத் தகுதி ஆக்குகிறது. கோயில் தொண்டர்,

வழிபடுவோர், வாத்தியகாரர் ஆகியோர்க்கும் இந்த அனுட்டானக் கிரியை அத்தியாவசியம் என்றே பேசப்படுகிறது. இவர்கள் உபயகாரர் போலப் பூசை கிரியைகளில் நேரடியாகச் சம்பந்தப்படுதல் இல்லை எனினும் அங்கு நிகழும் பூசை கிரியைகளில் இடம்பெறும் மந்திர சாதனைகளால் எழக்கூடும் சார்ச்சி அலைகளைத் தம்மை அறியாமலே தாம் ஏற்கும் வாய்ப்பு இவர்களுக்கும் உளதாம். எனவே அதற்காந் தூய்மைத் தகுதி பெறும் நோக்கில் அவர்களும் அதாவது கோயில் வளாகத்திற் சம்பந்தப்படும் அனைவரும் சைவ அனுட்டானகளை விளங்கவே நின்றாக வேண்டும் என்ற நியமம் உளதாயிற்று.

காந்தம் இரும்பை ஈர்க்கும் தான். ஆனால் இரும்பை மண் மூடி இருக்கும் போது அது நிகழாது. எனவே, அப்படிச் செய்துதான் ஆக வேணுமோ என்பது பலன் தரும் ஆட்சேபம் ஆகாது. கோயில் வளாகத்தில் சிவமயப் பிரபாவம் நேர்தலை நிராகரிக்கும் அர்த்தமற்ற ஆட்சேபமாகவே அது அமையும்.

பிறசமயத்தார் கோயில்களில் நிற்பது போல் மேற்சட்டையுடன் நாமும் நின்றால் என்ன? என்பது இந்நாளில் பிரபலமான ஒரு ஆசங்கை. அது தவறு; மேற்சட்டை தழுவாத தமிழ் உடையிலேயே கோயிலில் நின்றாக வேண்டும் என்பதற்கும் பிரதான காரணம் முற்குறித்த காரணமே. கோயிலில் வழிபடுபவர் தனது தேகப்பற்றையே பலிபீடத்தின் முன் விழுந்து கும்பிடுதல் மூலம் நீக்கிக் கொள்ள வேண்டும் என்பது விதியாய் இருக்கையில் மேற்சட்டையெனத் தேவைக்கு அதிகமான இன்னொன்றையும் சேர்த்துக்கொள்ளுதல் எங்ஙனம் பொருந்தும். அத்துடன் சைவாலய வழிபாடு, ஆலயத்தில் ததும்பும் அருள் அலைகளை ஐம்புன்களாலும் உள்வாங்கிக் கொள்ளும் இலட்சணம் உடையது. எனவே ஐம்புலன்களில் ஒன்றான பரிச உணர்வைத் தாங்கும் வழிபடுபவர் மேனி அத்தியாவசிய தேவைக்கு மேல் மறைக்கப்பட்டிருத்தல் ஆகாது என்பது பொருத்தமான நியமம். மேற்சட்டை இவற்றுக்குக் குந்தகமானது என்பதனை யாரும் ஆட்சேபிக்க முடியாது.

மறுசமயத்தவர் தத்தம் கோயில்களில் மேற்சட்டையோடு நிற்பதை ஆட்சேபித்தற்கு எதுவுமில்லை. அவர்கள் கோயில்களில், சைவக் கோயில்களிற் போல மந்திரக் கிரியைகளினால் ஏற்படும் சார்ச்சி அலைகளைப் பரிச மூலம் ஏற்க வேண்டும் நிலை இல்லை. அதனால் அவர்கள் சட்டையோடு நிற்பதும், சட்டை இன்றி நிற்பதும் ஒன்றுதான். அவர்கள் சமய இயல்புக்கு அது சரி. அது நமக்கு முன்மாதிரியாதற்கு இடமில்லை, என்பதும் இத்தொடர்பில் அறியத்தகும்.

மேலும் திருநீற்றுக்கு விசேட ஆற்றல் ஒன்று உண்டு. மந்திரசக்தியை ஏற்றுப் பயன் விளைவிப்பது அதன் விசேட ஆற்றல். "மந்திரம் ஆவது நீறு" என்ற தேவார வார்த்தை அதற்கு ஆதாரமாம். மந்திர சக்தியை ஏற்றுக் கொள்ளும் தன்மையால் தானே மந்திரமாய் உதவக்கூடியது நீறு என்பது அதன் விளக்கம். சைவர் வாழ்வியலில் பொதுவாகவும் சைவ ஆலய வழிபாட்டில் விஷேடமாகவும் திருநீறு அணிதல் வற்புறுத்தப்பட்டிருக்கும் காரணங்களில் முக்கிய மானது இதுவாகும். சிவனே திருநீற்றுக் கோலம். மாணிகவாசகருக்கு நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியவர் சிவன். திருஞானசம்பந்தர் கையில் மந்திரமும், மருந்துமாகிப் பாண்டியன் வெப்பு நோய் தீர்த்தது திருநீறு. நீற்றுக் கோலமாய் நின்று நினைப்பவர் உள்ளத்தில்தான் சிவன் இலகுவில் தோன்றுபவன் என்கிறார் அப்பர் சுவாமிகள். வெண்ணீற்றொளி சிவனடியார் உள்ளத்தொளிக்கு ஞாபகம் என்கிறார் சேக்கிழார். நாங்களும் நிறைவாய்ப்பூசிக் கொண்டு கண்ணை மூடித்தி யானிக்க உள்ளெல்லாம் வெள்ளொளியாய்த் திகழ்வது கண்கூடு. இந்த விஞ்ஞானகாலத்திலும் மாந்திரீகர்கள் கையில் மூட்டைக் கணக்கில் இருந்து வீபூதி பல சாதனைகளை விளைத்து வருதலை ஒன்றையும் நம்பாத நாஸ்திகர்கள் கூட நம்புகிறார்கள். இவ்வகையில் வீபூதி அணிந்த கோலம் ஆலயங்களில்

அத்தியாவசியமாக வேண்டப்படுகிறது. ஆலயத்தில் பரவும் மந்திர சக்தி அலைகளை வசீகரித்து தன்னை அணிந்திருப்பவர்கள் இடத்தும் அவ் அயலிலும் நிகழ வைத்தலில் பிரபல்யமானது வீபூதி.

வீபூதிக்கு அடுத்தபடியாக ஆலயங்களிற் சிவமயம் தழைக்க வைக்க வல்லவை பஞ்சாட்சர செபமும், திருமுறை ஓதலும். அவற்றுள் பஞ்சாட்சர செபம் உயர்ந்த சாதனையாளர்களுக்கே பொருந்தும். அதுபோல ஆகாது, திருமுறை, கற்றார், கல்லார், சிறியர், பெரியர், பாலர், விருத்தர் எல்லோர்க்கும் பொருத்தமானதாகும். திருமுறையின் ஒவ்வோர் பாடலும், ஒவ்வோர் வார்த்தையும், ஒவ்வோர் பதமும் கூடச் சிவன் பெய்ராக, சிவன் இலட்சணமாக, சிவன் புகழாக, சிவத்தியான மந்திரமாக அன்றி இருப்பதில்லை. உண்மைப் பக்தியில் தோய்ந்து, கனிந்து, பழுத்த அனுபவச் சொற்கள் வாக்கியங்கள் ஆதலால் அவற்றை உச்சரிக்கும் நாவே சிவமயமாம். உச்சரிப்பவரான ஆளே சிவமயமாவார். உச்சரிக் கப்படும் சூழல் சிவமயமாம். இத்திருமுறை யைப் பத்தியை வருவிங்ததுக் கொண்டு படிப்பது என்பது இல்லை. விசிறியை விசுக்கப் பவனம் தன்னாலே அசைவது போல திருமுறையைப் படிக்கப்படிக்க பக்தி தன்னாலே வந்து வந்து மூளும். ஆதலால், திருமுறை ஒதலுக்கு ஆலயத்தில் சிவமயம் விளைக்கும் ஆற்றல் மிகவும் உண்டு. எனவே ஐயர், அடியார், ஆண், பெண், குழந்தை, வயோதிபர் என்ற பேதமின்றி ஆலயத்தில் எவரெவர் எதுஎது செய்யும் பொழுதும் அவரவர் வாயில் எல்லாம் திருமுறை ஒலித்தாக வேண்டும். பூசையில் மற்றும் மந்திரங்களுக்குச் சமமாக ஓதி ஓதி மலரிடும் அர்ச்சனை முறை ஆட்சி பெற வேண்டும். தற்காலிகமாகப் பூசை வழக்கில் ஊடுருவி இருக்கும் "அவதாரய" வழக்குப் பண்டைய வழக்கில் இருந்த "அருளிப்பாடுக" என்ற அருள் வாக்கிற்குப் புனர்வாழ்வளித்து விலகிக் கொள்ள வேண்டும். இனி,

இச் சிவமய விளைவுக்கு இன்றிய மையாதவற்றுள் மற்றொன்று சித்தாந்த ஞானவுணர்ச்சியும், அதன் அநுபவ விளக்கமும். சைவாலயமே சிவஞானியொருவரின் உடலமைப்பு வடிவம். சிவனையறிந்து சிவனையடைதலே ஞானலக்ஷணம். ஆலயத்திற்குரிய நித்திய, நைமித்திக பூசை விழா ஒவ்வொன்றும் சித்தாந்த ஞானப் பின்னணியோடு கூடியவை. கோயிலில் மணியடித்தல், சகல படைப்புக்களுக்கும் ஆதிகாரணமாயதும், சகலபடைப்புக்களிலும் நின்று கொண்டிருப்பதுமான நாததத்துவத் தோற்றம். அபிஷேகம், சீவ அன்பில், சிவனை முழுக வைத்தல், தீர்த்தமாடல் சிவனருளில் ஆன்மா முழுகுதல், தூபங் காட்டுதல் சிவனது கிரியாசக்தி விளைவின் தோற்றம். "நாசித்துவாரத் திற்கெதிரே தூபங்காட்ட வேண்டும்" என அகோர சிவாசாரிய பத்ததி சொல்கிறது. "இப்பிரபஞ்ச மெல்லாம் பிரமத்தின் நிச்சுவாசம்" என வேதோபநிடதம் கூறுகிறது. பிரபஞ்சம் கிரியாசக்தி யினாலாம் விளைவென்பதில் ஆட்சேபமில்லை. எனவே, இத்தூபங்காட்டுங் கிரியை வேதாகம விளக்க அடிப்படையிலான ஒரு தத்துவப் பின்னணியைக் கொண்டிருத்தல் கண்கூடு. இவ்வாறே தீபந்தர்சிப்பித்தல் சிவனது ஞானசக்தி விளக்கமென்றும் அது முக்கண்களுக்குமெதிரே தர்சிப்பிக்கப்படவேண்டுமென்றும் மேற்குறித்த பத்ததி சொல்கிறது. "நைவேத்தியம் பண்ணுதல் சீவபோத த்தைச் சிவன் ஏற்க வைத்தல்" என்று பத்ததிகளும் ஜீவன் முத்தி நிலையில் உயிரில் அந்தரங்கமாயிருந்த சிவம் வெளிப்பட்டு உடலிலும் வியாபித்து (எந்தன் உடலிடங் கொண்டாய் எங்கெழுந்தருளுவது இனியே – திருவாசகம்) நிற்கையிற் சீவன்முத்த ருண்ணுமுணவு சிவனேயுண்ணு முணவாந் தன்மையை முன்னிட்டுச் சிவனை உண்பித்தலாகச் சைவத்திருமுறையும் தெரிவிக்கின்றன. "அடியேன் உண்ட ஊண் உனக்காம் வகை எனதுள்ளத்துள் எழுந்தருள் பரஞ்சோதி" என்ற திருவிசைப்பாப்பாடல் இங்கு அறியத்தகும். சிவன்சார்பில் அல்லாமல் ஆணவத்துடனான ஆன்மாவுக்குப் பந்த மோட்ச வாழ்வில்லை, என்ற விளக்கந்தர நிகழ்விக்கின்றது கொடியேற்றம். மகோற்சவ நிகழ்வுகள் ஒட்டு மொத்தமாகச் சிவனது பஞ்ச கிருத்திய விளக்கம்

தோற்றுபவை பிரபஞ்ச சிருஷ்டிப் பொருட்டுச் சிவன் சக்தியைத் தோற்றி அதனுடன் கூடுதல் என்ற ஞான விளக்கப் பின்னணியில் அமைகிறது திருக் கல்யாணம். இத்தியாதி இத்தியாதி.

ஆலய வழிபாட்டிற் கையுயர்த்திக் கூப்பல் "தன்னளவுக்குடனிருந்தானேனும் ஆன்மா எட்டு தற்கரிய உச்சத்திலுள்ளான் சிவன்" என்ற உண்மையின் விளக்கம். நிலத்தில் விழுந்து கும்பிடுதல் தேகப்பற்றைக் கீழ்ப்படுத்தி விடுவதாகவும், மீள எழுதல் தேகத்தை விட்டுத்தேகியாகிய ஆத்மாவாக வழிபடுவதாகவும் உள்ள இலட்க்ஷணத்தைக் காட்டும். அங்ஙனம் கும்பிடுங்கால் முகத்தை அழுத்தித் தலையைத் தாழ்த்துதல் சிவனடிக்கீழ் ஆன்மா ஒடுங்கி இன்புறும் "தாடலை" என்ற அத்துவிதச் சேர்க்கை அநுபவவிளக்கம். திருவிழாவில் சுவாமிக்குப் பின் போதல், ஆன்மா தன்முனைப்படங்கித் திருவருளின் பின் செல்லுதல் என்ற ஞான அநுபவ விளக்கம். "நும்பின் எம்மை நுழையப் பணியே" என்று திருவாரூர்த் திருவாதிரை விழாவில் வழிபாடாற்றும் அடியார்கள் வேண்டிக் கொண்டதாக வரும்அப்பர் அருளிச்செயல் இங்கு கருதத் தகும். அடியளித்தல், "திருவிழா உலாவில் புறப்பட்ட சிவனது நிலத்திற் பதிந்த திருவடிச் சுவடுகளைத் தலைமேற் கொள்ளல்". என்ற ஞான விளக்க அம்சமாய் அமையும். "பூவாரடிச் சுவடென்மேற் பொறித்து வை" என்ற அப்பர் பிரார்த்தனை விளக்கம் இதிலுண்டு. இத்தியாதி இத்தியாதி.

மேற்குறித்த விதமான உண்மை உணர்வு விளக்கப் பின்னனியில் இன்றைய நடைமுறையில் கோயிற் கிரியைகள், வழிபாடுகள் இடம்பெறக் காண்கின்றோமா? அழுது உருகி அன்பு நீராட்டி அபிஷேகம் செய்து பரிவு காட்டி மெச்சிப் பாராட்டிச் (கண்ணப்ப நாயனார் போல) சுவாமியை உண்பிக்கும் பொறுதியான நைவேத்தியம் நிகழ்த்தி அதற்கு அடுத்தனவுஞ் செய்து பூசித்து ரமிக்கும் காட்சி அருகி அருகிப் போகின்றதே. இவற்றின் அருமை, பெருமை தெரியும் அறிவாற்றல் பெரும்பாலுஞ் சொரூபிப்பது இல்லை. இதற்குக் காரணம், நிருவாகம், பூசகர் வழிபடுவோர் சார்பில் சைவ சித்தாந்த ஞான விளக்கம் பெரிதும் அருகிப் போயினமையே எனல் வெளிப்படையாகத் தெரிகிறது.

கோயிலுக்குக் கோயில் சித்தாந்த ஞான விளக்கமுள்ளோருக்கு வரவேற்பிருந்தது ஒருகாலம். சித்தாந்த சாத்திரப் படிப்பாய் இல்லாவிட்டாலும் கந்தபுராண, பெரியபுராண, திருவாதவூரடிகள் புராணங்கள் தெரிவிக்கும் உண்மைஞான விளக்கங்களைக் கோயில் மண்டபத்திற் பொறுத்திருந்து கேட்கும் வழக்கம் பிரபல்யமாய் இருந்தது அக்காலம். இப்போ நிலைமைவேறு. உவற்றைச் சொல்லுவோரில் கவர்ச்சி இல்லை என்பது ஒரு சாட்டு. உவை விளங்காது என்பது மறுசாட்டு. சுவாமி கும்பிடுவதற்கு உதெல்லாம் ஏன்? என்பது மற்றொரு விதப்பு. லௌகீகப் பாங்கான கவர்ச்சிமயம், அறியாமை மயங்களின் பிரதிபலிப்புக்கள் இவை ஆதல் சொல்ல வேண்டா.

சைவ ஆலயங்களில் புராண படனம், சைவ விஷயப் பிரசங்கம் நிகழ்த்தும் ஏற்பாடு முன்னையோர் தழுவிப் பலன் கண்ட வளர்ந்தோர் கல்வி முறையாம். வெளியில் உள்ள சமயஸ்தாபனங்களில் சமய, இலக்கியப் பிரசங்கங்கள் நிகழ்த்துவித்து வரும் முறை இருந்ததும் அதன் பொருட்டே. அப்படிபட்ட அனேகமான ஸ்தாபனங்களிற், பதவிக்கவர்ச்சி, பேச்சுக்கவர்ச்சி முதலிய ஏதுக்களைக் காட்டிப் பிரசங்கத்தகுதி இல்லாதாரை வழைத்துச் சொற்பொழிவு நிகழ்த்தி மகிழ்தல் இன்றைய பிரபலவழக்கமாய் இருக்கின்றது.

எனில் கோயில்களிலும், சூழலிலும் சிவனது விளக்கம் பொங்கிப் பெருகுதற்கு உரிய வாய்ப்புக்கள்

பெருமளவில் மறுக்கப்பட்டும், மறக்கப்பட்டும், வருதல் உண்டோ இல்லையோ ? இவற்றை மீள நிலை நிறுத்தா இடத்துச் சைவ ஆலயங்கள் சமூகப் பொய் மயக்கங்களைப் போக்கும் தமது புனிதக் கடமையில் இருந்து தவறி விடும் அல்லவோ? இது எல்லாராலும் எப்போதும் எதிர்பார்க்கப்படும் சைவ ஆலய வாயிலான சமூக நலவிருத்திக்குக் குந்தகமாமோ அல்லவோ?

சைவ ஆலயங்கள் வேண்டுமெனில், அவற்றால் சமூக நலன் விருத்தியுற வேண்டுமெனில், அதற்காம் முன்னேற்ற முயற்சிகளுக்கு ஆர்வமூட்டவல்ல அடிப்படைத் தேவையான சைவசித்தாந்த ஞான விளக்கம், எல்லோரிடத்திலும் விளங்க வைக்கப் பட்டாக வேண்டும். அவசியம் உண்டோ இல்லையோ? இவை உங்கள் சிந்தனைக்கு :

இந்து சமயம் என்பது ஒரு கூட்டுச் சரக்கு. அதன் கூறு ஆறில் செம்பாதி இருந்ததற்கு ஆதாரம் ஏதும் இல்லை. அதற்கு ஆயுசும் அதிகமில்லை. ஆனால் பிந்தி வந்த கொம்பு முன்பிருந்த செவியை மறைப்பது போல, வேதகாலத்துக்கும் முற்பட்டதென ஜோன் மார்ஷல், ஜி. யூ. போப் முதலிய மேல்நாட்டு அறிஞர்களாலும் தீர்மானிக்கப்பட்டுள்ள சனாதன சைவத்தை இது கெடுக்க நிற்கிறது இனி 1896 இல் அமெரிக்காவில் கூடிய சர்வமத மகாநாட்டில் இந்துமதம் என்ற பெயரில் இந்திய சமய ஞானத்தின் தனித்துவப் பெருமையை விளக்கி வீர கர்ச்சனை புரிந்து பெரு வெற்றியீட்டி 1897 இல் திரும்பிய சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்தில் அவ்வருடம் ஜனவரியில் வரவேற்று உபசரிக்கப்பட்ட போது தமது யாழ்ப்பாண விஜயத்தைப் பற்றி அவர் விடுத்த அறிக்கையில் "இந்து என்ற பெயர்க்குப் பதில் சைவன் எனக் கூற வேண்டும்." என்று கூறி இருந்தமை இன்றும் பத்திரிகைக் கட்டுரை ஒன்றில் பிரசுரமாகியிருக்கிறது.

இங்கு அத்வைதமும், வீரசைவமும் அனுட்டிக்கப்படுகின்றன. இந்து என்ற பெயருக்குப் பதில் சைவன் எனக்கூற வேண்டும். ஸ்ரீசைதன்ய தேவர் வங்காளத்திலே பரவச் செய்த இறைவனின் திவ்விய நாம சங்கீர்த்தனமும், நடனமும் ஆதியிலே தென் நாட்டிலே தமிழர்களிடையே பிறந்தன........ நன்றி – உதயன். 07. 09. 98.

இங்கு சுவாமிகளை வரவேற்றுப் பேசிய பிரமுகர்கள் சுவாமிகளுக்குப் பிரீதியாய் இருக்கும் என்ற நோக்கில் இந்து என்ற சொல்லையே மீள மீளப் பிரயோகிக்கக் கண்டதன் விளைவாக அவரது திருவுளக் குறிப்பு இங்ஙனம் வெளிப்பட்டதாகத் தெரிகிறது. தனியான சைவத்துக்குரிய சர்வ மங்கலங்களும் பொருந்தும் இந் நாட்டுக்கு இம்முறை வழக்குப் பொருந்தாது என்பதையே சுவாமிகள் சுட்டி உணர்த்தியுள்ளார். சுவாமிகள் உத்தமமான ஒரு சிவபக்தன். சிவபெருமானைப் பற்றி உள்ளமுருகப் பேசுபவர். சிவபெருமான் சூலமும் கையுமாகத் தமது மூரி வெள்ளேற்றில் ஏறித் (Lord Siva Mounting his stout bull) திபெத்தைக் கடந்து கீழ்பாலும், மேல்பாலும் திரிந்து லோகபரிபாலனம் பண்ணுவதாக அவர் மற்றோர் சந்தர்ப்பத்தில் வெளியிட்டுள்ள கருத்து உள்ளது . உடல் சிலிர்க்க வைக்கும். இத்தகு சிவபக்தனாகத் தோன்றுதற்கு உரிய முன்னீடு அவர் பிறப்பு வரலாற்றில் உண்டு. நல்ல சிவபக்தர்களாயிருந்த பெற்றோர்க்குக் காசி விஸ்வநாதரின் வரக்கொடையாக அவதரித்தவர் இவர் என்பது வரலாற்றுச் செய்தி – அறிவுக்கனலே அருட்புனலே. (ரா. கணபதி) பார்க்க.

சேர். பொன். இராமநாதன் சைவம் வழக்கை உறுதிப்படுத்தி இந்து வழக்கை நிராகரித்திருந்த செய்தி வெகுதானிய ஆடி இதழில் காணப்பட்டது. சமீபத்தில் மறைந்த சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் B.A அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு எழுதி இந்து எம்மொழிச் சொல்? என்ன அர்த்தத்தில் உள்ளது என ஆராய்வித்து அது அந்நியச் சொல் ஆதலையும் அர்த்தமற்ற அமங்கலமான அதன் பொருள்

இயல்பையும் தெரிந்து கொண்டு 1956 களில் யாழ்ப்பாணத்தில் இருந்த இந்து வாலிபர் சங்கத்திற்கு விளக்கிச் சைவ வாலிபர் சங்கம் என அதற்குப் பெயர் மாற்றம் செய்து வைத்தமை கண்கண்ட காட்சி.

முன் குறித்த இந்து மதபரிபாலன பீடாதிபதி சைவம் பற்றி விளம்பியவற்றில் எந்த ஒரு அம்சமும் சனாதன சைவ ஆதார நூல்களான சிவாக மங்களிலோ, சைவ சித்தாந்த சாஸ்திரங்களிலோ சைவ மக்கள் மெச்சிப் போற்றும் கந்தபுராணம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பவற்றிலோ, சைவத் திருமுறைகளிலோ இல்லயேயில்லை. இவற்றின் அடிப்படையில் வைத்தே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் சைவபரிபாலனஞ் செய்துள்ளார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இருந்தும், அவர் மறைந்து இரு தசாப்தங்கள் கழிய முன்னமே நம் நாட்டில் அங்கும் இங்குமாக அருகல் சொருகலாக இந்துக் கல்லூரி இந்து சாதனம், இந்து போர்ட் என இப்பெயர் மருவத் தொடங்கி இப்போ வாலிபர் சங்கம், பேரவை, தர்மம் எனப் பல ரூபங்களிலும் தலை தூக்கி வருதலைக் காணும் காட்சி துர்லபமானதாகும். இது சைவ மக்களாகிய நம்மவர்களின் ஆய்விலிப் போக்குக்கு அசையாத அத்தாட்சி ஆதல் கண்கூடு.

இந்து சமயம் முன் வைக்கும் ஆறு முழு முதல் தெய்வங்களையும், சமத்துவ நோக்கிற் பூசிக்கும் வழக்கத்தால் இவர்களிடத்தில் சிவத்தின் தனித்துவ மகிமையும் சிவனிடத்தில் அனன்னியமான பக்தியும் விளங்காமல் போகின்றன. பலர் முலையிற் பால் குடித்து வளரும் பிள்ளைக்குப் பெற்ற தாயிற் பிரத்தியேக மதிப்பும் கணக்கற்ற அன்பும் உண்டாதல் அசாத்தியம் தானே! சாதாரண சிறு சைவக் கோயில்களில் கூடப் பெரிய சிவாலயத்துக்குரிய சகலபரிவார மூர்த்திகளையும் பிரதிட்டை செய்து கோயில்கள் வெறும் அர்ச்சனைக் கோயில்களாகின்றன. சைவ வழிபாட்டு இலக்ஷணமான சிவஞானப் பேற்றை எதிர்பார்ப்பதற்குப் பதில் லௌகிக இன்ப வசதிகளையே எதிர் பார்க்க அப்பாவி மக்களைப் பயிற்றும் காமிய பூசைகள் கணக்கு வழக்கில்லாமல் பெருகுகின்றன.

இத்தகைய சோர்வுகள் உண்மையான சிவாகம நெறி பற்றி ஒழுகும் பாரம்பரியமான சிவாசாரியர்களால் ஏற்படுவதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. இவை முழுவதும் வேற்றார் கைவண்ணங்கள் ஆதல் வெளிப்படை. அந்த வேற்றாரை இனங்கண்டு அவர்கள் ஆக்கிரமிப்பில் இருந்து சைவத்தைக் காக்க வேண்டுதல் இன்றைய அத்தியாவசியக் கடமை ஆகும்.

இறுதியாக ஒன்று சொல்ல வேண்டும். அவர் சொன்னார் என்று இவரும், இவர் சொன்னார் என்று மற்றவரும் இந்து சமயத்தில் ஆறு தனிச் சமயமும், ஆறு முழு முதற் கடவுளும் உண்டென்று சொல்கிறார்களே தவிர காணபத்தியம், கௌமாரம், சௌரம் எந்தெந்த நிலப் பிரதேசங்களில் உள்ளன? என்னென்ன இலக்ஷணங்களில் உள்ளன? அவற்றுக்கு ஆதாரமுதல் நூல்கள் யாவை? என்று கேட்டால் பதில் சொல்வார் கிடையாது. உண்மையில் இல்லாத ஒன்றை, உண்மை எனக் கட்டி அழுவது சைவர்க்கு அடுக்காத செயல்.

சில வேளை அப்படி ஏதேனும் ஆதாரங்களைப் புதிதாகப் படைத்துப் பழையதாகப் பண்ணிக் காட்டுவார் இருப்பினும் அது ஏற்கத் தக்கதன்று. சிவாகமம், சைவ சித்தாந்த சாத்திரம், தமிழ்ச் சைவ புராணம், சைவத் திருமுறை என்ற இவைகளில் இடம் பெறாத எதுவும் சைவத்துக்குப் பிரமாணம் ஆக மாட்டா. சைவ மக்களால் ஏற்கப்படுவன ஆகா.

*தங்கள் பெறுமதிமிக்க அபிப்பிராயங்கள்*
*பின்வரும் விலாசத்துக்கு :—*

மு. கந்தையா,
*சத்தி முற்றம்,*
*ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.*



# இரட்டை விலங்கு



- கி. வா. ஜகநாதன் -

தாமரைப் பூவாகிய அழகிய பீடத்தில் சதுர்முகப் பிரமன் விற்றிருக்கிறான். காலையில் செய்ய வேண்டிய ஔபாசனத்தையும் வேதபாரா யணத்தையும் செய்தாகி விட்டது. கலைமகள் அங்கிருந்து தான் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய, நெறி முறை வழுவாமல் செய்ய வேண்டிய வைதிக காரியங்களைக் குறைவின்றி நிறைவேற்றிய பிரமதேவனுக்குச் சிறிது பசித்தது போலும்! தன்னுடைய கணக்குச் சுருணையை எடுத்துவரச் சொல்லிப் பார்க்க உட்கார்கிறான்.

எத்தனையோ காலம் ஆயிற்று இந்த நான்முகன் பதவிபெற்று. தினமும் பொழுது விடிந்தால் ஆன்மாக்களை உடம்பென்னும் சிறையிற் போட்டு, அவரவர்கள் தலையில் எழுதும் உத்தியோகத்தைச் செய்துவருகிறான். ஒரு முகத்தைப் போல ஒரு முகம் இருப்பதில்லை. ஒருவன் வாழ்க்கையைப் போல மற்றொருவன் வாழ்க்கை இருப்பதில்லை. ஒவ்வொன்றும் வெவ்வேறு விதம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அவன் செய்துவரும் சிருஷ்டிகள் அத்தனையும் ஒன்றுபோல ஒன்று இல்லை. எல்லாம் வெவ்வேறுவகை; வெவ்வேறு உருவம். பேதம் இல்லாத சிருஷ்டியே இல்லை. பேதமயம் ஜகத்தாக நிற்கும்படி படைப்புத் தொழிலிலே ஈடுபட்டுக் கிடக்கிறான் பிரமதேவன்.

கணக்குச் சுருணையை எடுத்துப் புரட்டிப் பார்க்கிறான். அன்று புதுக் கணக்குப் போடும் சந்தர்ப்பம். எந்த எந்த உயிரை எப்படி எப்படிப் பிறக்கச் செய்கிறது என்று யோசிக்கிறான். நான்கு தலைகளையும் எட்டுக்கைகளால் அமுக்கி யோசிக்கிறான். அந்த அந்த உயிர்களின் பூர்வ ஜன்ம சரித்திரத்தை எடுத்துப் பார்க்கிறான். அந்தச் சரித்திரத்தில் உள்ள லாபநஷ்டக் கணக்கைக் 'கறாராக'க் கணக்குப் பண்ணுகிறான். புண்ணியம் இத்தனை, பாவம் இத்தனை என்ற லாப நஷ்டக் கணக்குப் பார்த்து முடிவு கட்டுவதில் நான்முகன் மிகவும் கெட்டிக்காரன்.

பழங்கணக்குகளைப் பார்த்து, அடுத்தபடி என்ன பிறப்பு அளிப்பது என்று யோசித்து யோசித்து முடிவு கட்டித், தனியே பட்டோலையில் அந்த முடிவை எழுதிக் கொள்கிறான்.

'இவன் கோவில் தர்மச் சொத்தைக் கொள்ளையடித்தவன். சரி, இவனை வௌவாலாகப் பிறக்கும்படி செய்ய வேண்டும்.' 'இவன் தர்மம் செய்கிறவனைச் செய்யாதே என்று தடுத்தவன். இவன் கையில்லாத முடவனாகப் பிறக்கட்டும்.' 'இவன் நல்லவர்களைக் கடுமையான சொற்கள் கூறிக் கண்ணீர் விடச் செய்தவன். இவனுக்கு ஊமைப் பிறப்பைக் கொடுப்போம்.' 'இவன் தான் மணந்த மனைவிக்கு இன்பந்தராமல், ஒழுக்கக் கேடுள்ளவனாக வாழ்ந்தான். இவனுக்கு அலியாகப் பிறக்கும் பிறப்புத்தான் ஏற்றது.' – இப்படியாக அவன் கணக்குப் போட்டு முடிவு கட்டுகிறான்.

கட்டைப் பார்த்தாற் பிரம்மாண்டமாக இருக்கிறது. 'இன்றைக்குள்ளே முடிவு கட்ட வேண்டிய தொகை அதிகமாக இருக்கிறதே!' என்ற யோசனை அவனுக்கு வருகிறது. தன் வேலையை வேகமாகக் கவனிக்கத் தொடங்குகிறான். வீட்டுக்குப் போக வேண்டிய அவசரத்தில் வேலைபார்க்கும் குமாஸ்தாவைப் போல, அவன் வெகு வேகமாகத் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருக்கிறான்.

அன்று அவன் பட்டோலையில் புதிய பிறவி கொடுத்துப் பதிந்த ஜீவன்களுள் ஒரு ஜீவன் பூவுலகத்தில் உள்ள ஒருவன். அவன் பல பாவங்களைப் பண்ணினவன் என்று சொல்வதற் கில்லை; புண்ணியங்களையும் செய்திருக்கிறான். எல்லாவற்றிற்கும் மேலாக அவன் முருகனை நம்பி வாழ்ந்திருக்கிறான். முருகன் அடியார் கூட்டத்தில் ஒருவனாக இருந்து வாழ்நாளைப் போக்கியிரு க்கிறான்.

நான்முகன் அவசரத்தில் அவனுக்கும் மறு பிறவி ஒன்றைக் கொடுத்து விட்டான். தவறு; பெரிய தவறு; முருகனுடைய அடியார்களுக்கு மறுபிறவி இல்லை. அவர்களின் பாவ புண்ணியங்களைக் கணக்கெடுத்துத் தீர்மானம் செய்யும் அதிகாரம், தன் வாழ்நாள் ஆனதும் வேறு பிரமாவுக்கு இடங் கொடுத்து மாண்டுபோகும் இந்த நான்முகனுக்கு இல்லை. பட்டோலையில் முருகன் அடியார் பெயரே காணக்கூடாது. அவன் அவர்கள் பெயரைப் பயபக்தியோடு உச்சரித்து உருகலாமே ஒழிய, அவர்களைத் தன்னுடைய தராசிலே வைத்து நிறுப்பதாவது! ஏதோ போதாத வேளை; நிறுத்து எடை போட்டு முடிவுகட்டி அடுத்த பிறவி இன்னதென்று கூட எழுதி விட்டான்.

எல்லாம் அறியும் சர்வஞ்ஞனான முருகவேளுக்கு இந்தச் செய்தி தெரிந்து விடுகிறது. அடியார்களுக்கு ஏதாவது துன்பம் வந்தால் அதை முன் கூட்டியே அறிந்து விலக்கும் பேரருளாளன் அல்லவா அவன்? பிரமதேவன் செய்த பேதைமைச் செயலை நினைத்துப் புன்முறுவல் பூக்கிறான். "முட்டாள்; முன்னாலே நம்மை அவமதித்துப்பட்ட தண்டனை மறந்து விட்டது போலும்! இப்போது நம்முடைய அடியானை அலட்சியம் செய்து மற்ற ஜீவர்களோடு சேர்த்து விட்டான். நமக்குப் பண்ணும் அபராதத்தை நாம் பொறுத்தாலும் பொறுப்போம். நம் அடியாருக்குச் செய்வதைக் கணநேரமும் பொறுக்க மாட்டோம். ஆரங்கே?" என்று அழைத்தான் கருணைவாரிதி. லட்ச வீரர்களுள் ஒருவன் கைகட்டி வாய்புதைத்து வந்து முன்னே நின்றான். "அந்த நான்முகனை இங்கே இழுத்து வா. நம்முடைய அடியான் ஒருவனைப் பிறப்பெடுக்கும் கூட்டத்தாரிலே சேர்த்துப் பட்டோலையில் எழுதியிருக்கிறான். என்ன துணிச்சல்! போ; சீக்கிரம் போய் இழுத்து வா. பக்தனுக்கு அபசாரம் செய்தவனைக் கண நேரம் கூடத் தண்டனை கொடுக்காமல் வைத்திருக்கக் கூடாது" என்று கண்ணிலே சிவப்பூர உத்தர விட்டான் எம்பெருமான்.

வீரன் ஓடினான், சத்திய லோகத்துக்குப் போய்ப் பிரமதேவன் இல்லத்தை அடைந்தான். பிரமதேவன் கணக்குச் சுருணையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். வீரன் அவன் முன்னே போய்ப் படபடப்போடு நின்றான். தலை நிமிர்ந்து பார்த்த கமலாசனனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. கனல் கொப்புளிக்கும் கண்ணோடு நிற்கும் வீரனைக் கண்டு, "என்ன விசேஷம்" என்று விநயத்தோடு கேட்டான்.

"எழுந்திரையா, எழுந்திரு. உன்னுடைய கணக்குச் சுருணையை அதோ அந்த ஓம குண்டலத்திற் போட்டுப் பொசுக்கு. வா, என்னுடன்."

"என்ன செய்தி? எங்கே வரவேண்டும்?" என்று நடுங்கிக் கொண்டே கேட்டான் நான்முகன்.

"அங்கேதான்; அன்றைக்கு உன் காலில் விலங்கு போட்டுத் தலையில் குட்டுக்குட்டிச் சிறையில் அடைத்தாரே, அவரிடம். அதெல்லாம் இப்போது மறந்து விட்டது போலும்!"

மறையோன் தத்தளித்தான். இன்னும் அவனுக்கு விஷயம் விளங்கவில்லை. "எதற்காக இவ்வளவு படபடப்பு?" என்று மெல்லக் கேட்டான்.

"புறப்படையா! எங்கள் பெருமானை அவமதித்துப் பட்ட சுகம் உனக்குத் தெரிந்ததுதானே? அடியார்களைப் பாதுகாக்கும் வேலையைத்

தொண்டாகப் பூண்ட பெருமான் குமாரக் கடவுள் என்பதை நீ அறியவில்லையோ ? அவர் கையில் உள்ள வேல் சாமானியமானதா ? அது தனிச் சிறப்புள்ள வேல். பொங்கிய கடல் வாய்விட்டு அலறச்செய்த வேல். பளபளத்து வந்த கிரவுஞ்சகிரியைப் படுசூரணமாக்கிய வேல். அந்த வேலைக் கையிலே பிடித்த எங்கோனுக்கு உன்னுடைய காரியம் தெரிந்து விட்டது. நீ எப்படி முருகனடியார் பெயரைப் பட்டோலையில் இடலாம்?"

சுருணையைக் கட்டி வைத்து விட்டுக் கவலை முகத்தில் தேங்கப் பிரமதேவன் புறப்பட்டு விட்டான். 'ஐயோ! வேகத்தில் நான் எந்த மகானுபாவனையோ பிறக்கிறவர்கள் வரிசையிலே சேர்த்து விட்டேன் போலிருக்கிறது' என்று நினைக்கிறான். யோசித்துப் பார்க்கிறான். உடம்பெல்லாம் வேர்க்கிறது. கால் தன் பாட்டில் நடந்து கொண்டிருக்கிறது.

இருவரும் முருகன் சந்நிதியை அடைந்தார்கள். "ஏ பிரமதேவா! நம்முடைய அடியார்களிடம் உன்னுடைய கை வேலையைக் காட்டக் கூடாதென்பது உனக்குத் தெரியாதோ?" முருகன் படப்படப்புடன் கேட்டான்.

"சுவாமி, நன்றாகத் தெரியும்".

"அப்படியானால் ஏன் இன்று ஓர் அடியவனை உன் பட்டோலையில் எழுதினாய் ?"

"அவசரத்தில் அறியாமல் செய்ததாக இருக்கும். அபசாரத்தைப் பொறுத்தருள வேண்டும்"

"பொறுப்பதாவது ! இப்படியே விட்டுவிட்டால் உனக்கு நினைவு இராது. இப்போது உனக்குக் கொடுக்கும் தண்டனை உன் ஞாபகத்திலே இருக்கவேண்டும். அப்போதுதான் நீ மறு முறை இத்தகைய தவறு செய்யமாட்டாய்."

"சுவாமியின் திருவுள்ளம் அதுவானால் இந்தப் பாவி எப்படி மாற்ற முடியும் ?" பிரம்தேவன் அழாக்குறையாக விடை சொன்னான்.

"வீரா, கொண்டு வா விலங்குகளை போன தடவை நம்மை அவமதித்ததற்காக இவனுக்கு ஒரு விலங்கு போட்டோம். இப்போது இரண்டு விலங்கு போடவேண்டும். நமக்குச் செய்யும் அபசாரத்தை விட நாம் அடியார்க்குச் செய்யும்அபசாரம் இரண்டு பங்கு தண்டனைக்கு உரியது என்று தெரிந்து கொள்ளட்டும்" என்று வடிவேற் பெருமான் கட்டளையிட்டான்.

அடுத்த கணத்தில் இரண்டு விலங்குகள் வந்து விட்டன. பிரமதேவன் கண்ணீர் மாலை மாலையாக வழிய நின்றான். "மாட்டு விலங்குகளை" என்று ஆண்டவன் உத்தரவிட்டு விட்டுச் சற்று அந்தப்புரம் போய் வரலாம் என்று புறப்பட்டான்.

வீரன் பிரமதேவன் காலில் இரண்டு விலங்குகளையும் பூட்டிவிட்டான். அடுத்தபடி என்ன செய்வதென்று உத்தரவுக்குக் காத்துக் கொண்டு நின்றார்கள் யாவரும்.

முருகன் மீண்டும் வந்து சிங்காதனத்தில் அமர்ந்தான். விலங்கு பூண்ட பிரமதேவன்மேல் கண்ணை ஓட்டினான். உடனே, "சே சே! இப்படியா பூட்டுவது? காலுக்கு இரட்டை விலங்கு பூட்டிவிட்டாயே. பட்டோலையில் எழுதிய கைக்கு அல்லவா ஒரு விலங்கு பூட்ட வேண்டும்? காலுக்கு ஒன்று, கைக்கு ஒன்று – இப்படி இரட்டை விலங்கு பூட்டு. அப்போது தான் இவனுக்குப் புத்தி வரும்" என்று ஆண்டவன் ஆணையிட்டான். பிரமதேவன் இரட்டை விலங்கு பூண்டான்; காலில் அல்ல; காலில் ஒன்று, கையில் ஒன்று – ஆக இரட்டை விலங்கு. பாவம்! அடியவன் இன்னும் பிறவி எடுக்கவில்லை. அவனைப் பிறக்கும்படி ஏற்பாடு செய்து எழுதியதற்கு இரு விலங்கு !

அருணகிரிநாதப் பெருமான் திருவுள்ளத்தில் இந்தக் காட்சி தோன்றியதோ என்னவோ, தெரியாது. அவர் திருவாய் மலர்ந்தருளிய கந்தர் அலங்காரத்தில் அற்புதமான பாட்டு ஒன்று வருகிறது. அந்தப் பாட்டைப் படித்துச் சிந்தித்து ஆழ்ந்த போது இருவிலங்கு பூண்ட பிரமதேவன் என் கண்முன் நின்றான். பாட்டு இதுதான்.

*பங்கே ருகன்எனைப் பட்டோ*
*லையில் இடப் பண்டுதளை*
*தன்காலில் இட்டது அறிந்தில*
*னோ?தனி வேல்எடுத்துப்*
*பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ்*
*சிலம்பு புலம்பவரும்*
*எம்கோன் அறியின் இனிநான்*
*முகனுக்கு இருவிலங்கே.*

(பங்கேருகன் – பிரமதேவன். பட்டோலை – கணக்கெழுதும் ஒலை, தளை – விலங்கு, பொங்கு ஓதம் – பொங்கும் கடல். வாய்விட – அலற. பொன்னஞ் சிலம்பு – வெண்பொன்னாலாகிய கிரவுஞ்ச மலை.)

குட்டிச் சிறையிருத்தின அப்போது முருகனைப் பார்த்து மரியாதை செய்யாமல் மேலே நடந்தது பிரமன் கால். அப்போது போட்ட விலங்கு காலுக்கு. இப்போது குற்றம் செய்தது கை; அதற்கும் சேர்த்துப் போடுவதுதானே முறை?

கடிந்தாரைச் சொல்லி அழு
காலவிலங்கு போட்டுவைப்போம்
தொட்டாரைச் சொல்லியழு
தோள்விலங்கு போட்டு வைப்போம்

என்று தம் அன்புக் குழந்தையைத் துன்புறுத்துகிறவருக்குக் கைவிலங்கும் கால் விலங்கும் போடப்புகும்தாயைப் போல, முருகனும் கால்விலங்கும் கைவிலங்கும் போடுவதுதானே பொருத்தமானது? அக் குழந்தையினிடம் பெற்ற தாய்க்கு இருக்கும் கருணையை விட, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வுயிருக்கும் தாயாக இருக்கும் முருகனுடைய கருணை சிறந்தது அல்லவா?

ஔபாசனம் – காலை மாலைகளில் இல்லறத்தோர் வேள்வித் தீ வளர்த்தல். சுருணை – சுருள்

*நன்றி. பெரும் பெயர் முருகன்*

# ஒழுக்கமுடன் வாழ்வதால் என்ன பயன்?

*பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு*
*நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை*
*இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்*
*ஒழுக்கம் பிழையாத வர்.*

*உயர் குடியிற் பிறக்கும் பெருமை, நீண்டநாள் உயிர் வாழ்தல், செல்வச் சிறப்பு, அழகிய தோற்றம், நிலத்துக்கு உரியோராதல், சொல்லாட்சி, கல்வி அறிவு, நோயற்ற வாழ்வு என, உயரிய வாழ்வுக்கு இலக்கணமாகக் கூறப்பட்ட எண்வகைச் சிறப்பினையும், ஒழுக்கநெறி தவறாது நடப்பவர்கள் வாழ்வில் அடையப் பெறுவர்.*

*ஆசாரக் கோவை*

திருவாசகச் சிந்தனை


# திருப்பூவல்லி

- பண்டிதர் சி. அப்புத்துரை -

வல்லி என்பது கொடி. பூவல்லி பூக்கொடியாம். பூவல்லி கொய்தல் என்பது மகளிரது விளையாட்டுகளுள் ஒன்று என்றும், அது எத்தகையது என்பது விளக்வில்லையென்றும் திருவாசக உரையாசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் கூறுவர். பூக்கொய்தலாகிய விளையாட்டு என்பர் பண்டிதமணி க.சு. நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள்.

பூவல்லி கொய்யாமோ என்று பாடல்கள் நிறைவுறுவதால் கொடிப்பூக்களைக் கொய்வோம் என்பதாகப் பொருள் கொள்ளலாம். வல்லி என்னும் பெயருடையதொரு கொடியும் உண்டு. பூவும் வல்லியும் கொய்வோம் என்று பொருள் கொள்வது நனி பொருந்தும் என்று பண்டிதமணி நவநீத கிருஷ்ணபாரதியார் கூறுவர். சூட்டுதற்கு வேண்டிய மாலை தொடுப்பதற்குரிய பூவையுங் கொடியையும் கொய்வோமாக என்று கூறியதாகப் பொருள் விளக்கமுந் தருவர். மாலை தொடுப்பதற்குக் கொடி வேண்டியதாகின்றது.

வல்லிப்பூ என்பது நான்கு வகைப் பூக்களுள்ளே கொடிப்பூக்களைக் குறிப்பதாகும். ஏனைய மூன்று வகையும் முன்னே பறிக்கப்பட்டன வென்றும், இப்பதிகத்தின் பதின் மூன்றாவது திருப்பாடலில் வரும் "புனை கொன்றைப் பொன்தாது பாடி'' என்று வருவது அதனை உறுதி செய்யுமென்றும் காட்டுவர் பண்டிதமணி பாரதியார் அவர்கள். நால்வகைப் பூக்களிற் பெரும்பான்மை பற்றிக் கொடிப்பூவே கூறப்பட்டது என்பர் திருக்குறள்வேள் ஜி வரதராஜன் அவர்கள். எல்லா வகைச் சிந்தனைகளும் பூவல்லி என்ற தொடரின் பெருமை பேசுவனவாக அமைந்துள்ளமை மகிழ்வைத் தருகிறது.



இப்பதிகத்துள்ள திருப்பாடல்களெல்லாம் பூவல்லி கொய்யாமோ என்று நிறைவு பெறுகின்றமையால் தெய்வ உணர்வைத் தரும் திரு என்னும் அடையுடன் சேர்த்துத் திருப்பூவல்லி என இப்பதிகப் பெயரை அமைத்துள்ளனர். நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா என்னும் பா வகையைச் சேர்ந்த இருபது திருப்பாடல்களைக் கொண்டது இப்பதிகம். இப்பதிகம் பேசும் திரண்ட பொருட் பேறென்பதாக, "மாயாவிசயம் நீக்குதல்" என்னுந் தொடர் திருவாசத் திருவுள்ளக் கிடையிற் காணப்படும். உலகின் வெற்றியாகிய மயக்கத்தை நீக்குதல் என்பது பொருள்.

இனித்திருபாடற் பொருள் காண்போம்.

✤ இறைவன் திருவடிகளை என் தலைமேல் வைத்தலும், முன்பு எனக்குத் துணையாயி ருந்தவர்களை விட்டு நீங்கினேன். நீர் நிலைகள் பொருந்திய தில்லையில் நடம் புரிகின்ற, பிறவிக் கடலுள் தெப்பம் போன்றவனாகிய அவனுடைய சிறப்புக்களைப் பாடிப் பூவல்லி கொய்வோம். இறைவன் திருவடிப்பேறு உலக இன்ப நாட்டத்தை இல்லாதொழிக்கு மென்பது பெறப்பட்டது.

✤ என் தந்தை, என் தாய் என் உறவினர், ஏனைய

எல்லாமாகிய என் பாசக் கட்டினைத் தொலைத்து என்னை ஆண்டு கொண்ட பாண்டிப்பிரான், திருவிடை மருதூரில் உள்ள இன்பத் தேன் பொருந்திய பொந்தைத் துதித்துப் பூவல்லி கொய்வோம். இனிமை செய்பவன் இறைவன் என்பது பெறப்பட்டது.

✤ தாயினும் மேலான கருணையை உடைய எம்பெருமான், நாயினுங் கீழான என்னை ஒரு பொருட்டாக மதித்து வஞ்சனையுடைத்தாகிய பிறவியினை இல்லாமற் செய்து ஆட் கொண்டான். என் கொடிய வினையின் வாயில் மண்பொடியை இட்டுப் பூவல்லி கொய்வோம். இறையருள், வினைநீக்கம் செய்யும் என்பது பெறப்பட்டது.

✤ சிறப்புடைத் தில்லைப்பதி வேந்தாகிய சிவனைத் துதிக்காது அழிந்த தக்கன், எச்சன், சூரியன், சந்திரன், அக்கினிதேவன், என்போர் பூதப்படையையுடைய வீரபத்திரரால் தாக்கத் திற்குள்ளானமையைப் பாடிக் கொடிப்பூ கொய்வோம். இறைவனை மதிக்காதோர் துன்பத்திற்குள்ளாவர் என்பது பெறப்பட்டது.

✤ வண்டுகள் தேடி அடைவதற்குரிய கொன்றையைச் சடையிற் சூடிய சிவன் உலகினர் முன் மனிதனாகி வந்து என்னை ஆண்டு கொண்டு உள்ளத்திலே புகுந்துள்ளான். யான் அவனைத் தேடிக் கூத்தாடியும் காணப் பெறவில்லை. யான் உனக்கு அடைக்கலம் என்று கூக்கூரலிடும் படியாகத் திருநடஞ் செய்கின்ற வானாடர் தலைவனுக்காகக் கொடிப்பூவைப் பறிப்போம். இறைவனை விட்டு நீங்கி அடியவர் வாழ விரும்பமாட்டாரென்பது பெறப்பட்டது.

✤ மூன்று மூர்த்திகளாகி, அறிதற்கரிய பொருளாயுள்ள ஒருவன், முத்தீவழியாக அவிசை ஏற்கின்ற தேவர்களுக்கு இரங்கி அருள் செய்து, திரிபுரத்தவர் தலை அற்று விழும்படி தனது திருப்புருவத்தை வளைத்தருளி முப்புரங்களையும் எரித்த விதத்தைப் பாடிக் கொடிப்பூ கொய்வோம். இறைவன் அளப்பிலதாம் ஆற்றல் கூறப்பட்டது.

✤ தன்னை வணங்கத் தலையைத் தந்து, கழலணிந்த திருவடியை வாழ்த்த வாயை அமைத்து, சேர்ந்து பழகுதற்கு நல்ல அன்பர் கூட்டத்தை உண்டாக்கி உமையம்மை யுடனாகித் தில்லையிற் கூத்தி யற்றுகின்ற அருட்குண நிதியைப் பாடிக் கொடிப்பூ பறிப்போம். முக்கரண வழிபாட்டின் முதன்மை பெறப்பட்டது.

✤ என்னை வழிப்படுத்தியருளி, தனது சிறப்புப் பொருந்திய அடியார்களது திருவடிகளுக்கு உரியவனாக்கிக் கொண்டு, எம்மை வருத்துகின்ற பழைய வினையைப் பொய்யாக்கிய விதத்தைப் பாடிப் பூவல்லி கொய்வோம். அடியார் திருவடித்தொண்டின் சிறப்புக் கூறப்பட்டது.

✤ பல நாள் வணங்கித் தொண்டு செய்யத் திருவடி மலரை என் மனதில் அழகிய சோதியாய்ப் பொருந்த வைத்த பெருமைக்குரியவன், கல்லில் நாருரிப்பது போன்று என் நெஞ்சை அன்பு நெஞ்சாய்க் கனியச் செய்து ஆட்படுத்திக் கொண்டான். அவன் திருவடிகள் இரண்டும் உயர் செல்வமாயிருத்தலைப்பாடிப் பூவல்லி கொய்வோம்: இறைவன் திருவடிப் பெருமை பேசப்பட்டது.

✤ பேராசைக் குரியதாகிய இந்த உடம்பு நீங்கும் வண்ணம், திருப் பெருந்துறையை உடைய வனும் சிறந்தனவாய தன் திருவடிகளை என் தலைமீது வைத்தவனும், கார் வண்ணத்த கடல் நஞ்சை உண்டு களித்த, காபாலம் என்னும் கூத்தையுடையவனுமாகிய சிவனது முப்புரப் போரைப் பாடிப் பூவல்லி கொய்வோம். இறைவன் கருணைத்திறம் பேசப்பட்டது.

✤ பால், அமுதம் என்பன தேனுடன் கலந்தமை போன்று மிக மேலான பொருளாய்க் குளிர்ந்த வடிவு கொண்டு, என் உள்ளத்து இடங் கொண்ட பெருமான் ஒலிக்கின்ற கழலணிந்த திருவடிகள் உலகத்தாராற் போற்றப்படும்.

பெரியோர்க்கு நன்நெறியாகும். அந்நெறி அத்திருவடிகளின் புகழ்பாடிப் பூவல்லி கொய்வோம். இறைவன் திருவடி வணக்கச் சிறப்பு முன் வைக்கப்பட்டது.

✤ இந்திரன், மால், அயன், ஏனைத் தேவர்கட்கெல்லாந் தலைவனாகி நின்று அவர்களொடு குணமும் வடிவும் பொருந்துதலில்லாத இறைவன் பெரிய கடலில் உண்டான நஞ்சை அமுது செய அது உணவானமையைப் பாடிப் பூவல்லி கொய்வோம். குணங் குறி கடந்த இறைமைப் பண்பு பெறப்பட்டது.

✤ அன்று கல்லாலின் கீழிருந்து அருமையான வேதப் பொருள்களை உபதேசஞ் செய்து தேவர்களும் மாமுனிவர்களும் தினமும் நிரம்பத் துதிக்கின்ற அழகிய கழல்களை உடையவனாய இறைவன் அணிந்த கொன்றை மலர்களது பொன் போன்ற தாதினைப் பாடிப் பூவல்லி கொய்வோம். இதில் இறை இயல்பு பெறப்பட்டது.

✤ படமாகத் தன் திருவடிமலர்களை என் உள்ளத்திலே தந்து என் உடலை இடமாக ஏற்றுக் கொண்டு திருவேகம்பத்தில் வீற்றிருக்கின்ற பெருமான் நீர் நிலையாற் சூழப் பெற்ற தில்லையைத் திருநடஞ் செய்தற்குரிய பொருத்தமான இடமாகக் கொண்டு கூத்தியற்றும் வகைகளைப் பாடிக் கொடிப்பூ கொய்வோம். இறைவன் திருநடம் நிகழுமிடம் பேசப்பட்டது.

✤ அக்கினி, சூரியன், இராவணம், அந்தகாசுரன், கூற்றுவன், திருமால், பிரமன், இந்திரன், சந்திரன், தக்கன், எச்சன் என்போர் இயல்பு அழியும்படி சினந்தவனது புழைப்பாடிப் பூவல்லி கொய்வோம். இறைவன் மாக்கருணை கூறப்பட்டது.

✤ திண்ணியதும் போர்க்குரியதுமான விடையை யுடையவனும், சிவபுரத்து அடியார்களுக்குச் சிங்கம் போன்ற தலைவனும், மண்ணுலகில் வந்தியிடம் பெற்ற பிட்டை உண்டு அருளியவனும், ஆகிய சிவன், பாண்டியன் ஏவல் கொண்டதனால் உண்டான புண்ணைப் பாடிப் பூவல்லி கொய்வோம். இறைவன் எளிவந்த இயல்பு கூறப்பட்டது.

✤ என் மனத்துட் புகுந்து என்னை ஆட் கொண்டவனது திருவடிகளை முதன்மையராய திருமால், பிரமன், தேவர்கள் அசுரர்கள் அறியமாட்டார்கள். நிலை அவ்வாறாக யாம் போற்றுவதோ? அவன் அணியாகவுள்ள பாப்புகளைப் புகழ்ந்து பாடிப் பூவல்லி கொய்வோம். அவனருளாலேதான் அவனை வணக்கலாம் என்பது பெற்றப்பட்டது.

✤ தேர் நிறைந்து செல்லும் தெருக்களையுடைய திருப்பெருந்துறைப் பெருமான் தன் சிறப்பு மிக்க திருவடிகளில் அணிந்த வலிய சிலம்புகள் ஒலிக்கும் சிலம் பொலி கேட்டு நிரம்பாத பேராா்வமுடையேனாய் அடியேன் மனம் மகிழும்படியாகத் திருக் கூத்தி யற்றுவதாலுளதாம் பேரின்பத்தைப் பாடிக் கொடிப்பூ கொய்வோம். திருவடிப்பேற்றின்பம் பேசப்பட்டது.

✤ யானை (அசுரன்) அனையானைக் கொன்று தோலை உரித்துத் தன் திருமேனியிற் போர்த்துக் கொண்ட திருப்பெருந்துறையான், அன்பரிடத்துப் பித்துப் பிடித்தவன் போன்று, மூப்புடைய உருக் கொண்டு, குழந்தை போன்று மாறுவோனும், முத்திக்கு முதலானவனும், திருவுத்தர கோசமங்கை வள்ளலுமாகிய இறைவன் என் புத்தியிற் புகுந்தமையைப் பாடிக் கொடிப்பூ கொய்வோம். இறைவன் வீடருள் நிலை கூறப்பட்டது.

✤ திருப்பெருந்துறையினனாகிய இறைவன் குதிரையில் ஏறி மதுரையிற் புகுந்து தெய்வீகம் விளங்கத் தலைவனாகி எம்மை ஆட்கொண்டருளும் செந்தாமரை மலர் போலும் திருவடிகளைத் துதித்துக் கொடிப்பூ கொய்வோம். இறைவன் திருவடியை வணங்க வேண்டுமென்பது கூறப்பட்டது.

# சைவ ஆசாரம்

முருகவேபரமநாதன்

சிவனையே முழுமுதற் பொருளாக மதித்து வாழ்பவர்கள் சைவசமயிகள். இவர்கட்கென்றே ஒரு தனித்துவமான பண்பாட்டுக் கோலம் உண்டு. இந்த அமைப்புள் வாழ்ந்து, வளம்கண்டு, ஒரு உயர்ந்த சமுதாயத்தை உருவாக்குபவர்கள் இவர்கள். இப்பக்குவம் பன்முகத்தாலும் நிறைந்து வழியும்படி ஒரு வாழ்வியற் தத்துவத்தை முன்னெடுதுச் செல்பவர்கள், செல்ல வேண்டும். இவர்கட்கென்றோர் முத்திரை, இலச்சினை உண்டு. கலாசாரம், பண்பாடு, சால்பு, நாகரிகம் போன்ற பலதிறப்பட்ட ஆளுமையின் கவின்நலமே இவர்களின் வாழ்வியற் தர்மம். மனிதவாழ்க்கை நீரோட்டத்துடன் சைவமும், சார்ந்த ஒழுகலாறுகளும் ஒரு பூர்ண, புனித மானுடஇயலைக் கட்டி வளர்க்க வேண்டும். அப்போதான் தாலையாய சமுதாயம் உருப் பெறும், உய்திகாணும். இந்நெறிப்பாட்டிற் சைவம் தனது பங்களிப்பாற் சுகாதாரமான, ஆரோக்கியமான வாழ்க்கை நீரோட்டத்தை மக்கட் பண்புடன் இணைத்துச், சிறந்த தலவரலாறுகளால் மிளிரப் பண்ணுகிறது. இவ்விழுமியத்துறைகளில் ஒரு அம்சம் தான் ஆசாரம் என்பதும்.

ஆசாரம் என்பது பலநோக்கிற் பிரலாபிக்கப்பட்டாலும் தூய்மை, புனிதம், சுத்தம் போன்ற அம்சங்களின் சேர்க்கையே ஆகும். ஆசாரம் என்பது கல்வி, ஆசாரம் என்பதொழுக்கம் எனக் கீழ்க் கணக்குகள் கூறினும் அவையுட்பட்ட நாளாந்த வாழ்வின் நடைமுறைச் சித்தாந்தத்தின் சாதனைகளே ஆசாரம். பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று, ஆசாரக் கோவை. இது தந்த பெருவாயின் முள்ளியார் சைவ சமயத்தவர் என்பதும், நூல் சிறந்த கருதுகோள்களை வெளிப்படுத்துகிறதென்பதும் பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்களின் கருத்தாகும். எது எவ்வாறாயினும் எமது சைவ சமய ஆசாரங்களைக் கைக் கொண்டு எம் வாழ்வைச் செப்பனிட வேண்டும். பழைய தலைமுறையினர் ஆசார சீலராய் வாழ்ந்தனர்; தம்பரம்பரையை வளர்ந்தனர். அந்த ஒழுங்கும் கட்டுப்பாடும் சிறந்ததோர் சமுதாயத்தை உருப்படுத்தியது. தப்பு, தண்டா செய்யும் போது கண்டித்தார்கள். தண்டிக்கவும் செய்தார்கள். ஒரு நல்ல மனித பரம்பரை எதிலே தங்கி இருக்க வேண்டுமோ அதைப் பெற்றோர், ஆசிரியர், கிராமப் பெரியோர் கட்டி வளர்க்கவும் செய்தனர். இதனால் நல்லபரம்பரை உருவானது. காலத்துக்குக் காலம் நெறிதவறும் போது தட்டிக் கேட்கப் பலர் இருந்தனர். வளர்ந்து வரும் பிள்ளைகளும் பொறுப்புணர்வுடன் நடந்து மேலோங்கினர். இது ஒரு மேம்பாட்டியலின் வளர்முகம் எனலாம். இப்படி வாழக் கூடாதென்பதையும், எப்படியும் வாழலாமென்ற நோக்கத்தை மறுதலித்து இப்படித்தான் வாழ வேண்டுமென்பதையும் மனதில் இருத்தி எம்மை நல்லாற்றுப்படுத்தி அருகதையுள்ள குடிமக்களாக்கி நடமாட விட்டார்கள். இதற்குத் தூணாய் நின்ற மகோன்னதமான கல்வி வளமும் சமயப் படிப்பும், நாளாந்த நடைமுறைகளும் ஒன்றிணைந்து சைவ ஆசார நெறி நாம் வாழ நல்ல உருப்படியான, உபயோகமான காரியங்களை நமக்கு வழங்கின. இவைகள் நம்மைச் செம்மைப்படுத்தின.

சீரிய நேரிய வாழ்வமைதியையும் தந்தன. இதனால் நாம் உயர்ந்தோம். இன்று கொஞ்சமும் தடம்புரளாமல வலுப்பெற நம் சைவ மரபு நல்ல சாதனமாய் அமைந்துள்ளது.

நாம் நோயின்றி வாழப் பல நல்ல அணுகுமுறைகள் சமயத்தில் நிறைய உண்டு. சுத்தம் சுகாதாரம் இன்றியமையாதன. இதனால் நாம் மன மகிழ்வுடன் வாழ முடியும்; மன ஒடிவின்றியும் வாழ அவை கைகொடுக்கும் எனவே இந்தச் சுத்தம் பேணலும் ஆசாரம் தான். இவற்றை நாம் தான் பேண வேண்டும், அனுசரிக்க வேண்டும். உணவு, உடை, உடல், வதிவிடம், வாழிடம், ஆலயம், பாடசாலை வீதி இவைகள் விஷயத்தில் வெகு உன்னிப்பான கவனம் வேண்டும். உதாரணமாகச் சொன்னால் உடைகளைத் தினமும் தோய்த்து உலர விட்டுக் கட்டினோம். சில போது சலவைக்குக் கொடுப்போம். வீடு முற்றம் பெருக்கிச் சாணியால் மெழுகிச், சாணி தெளித்து, மஞ்சள் நீர் கொண்டு மினுக்கினோம். வாசனை நறும்புகை இட்டோம் குப்பை கூளங்களை எரித்தோம். தினம் நீராடினோம். சனிதோறும் தலை முழுகினோம். படுக்கைகளைப், பாவனைப் பொருட்களைக் கழுவிப் பாவித்தோம். தாய்மார் கூடச் சமையல், சாப்பாடு, அடுக்களை, அடுப்பு, தண்ணீர் காய்கறிப் பொருள் எல்லாமே சுத்தமாயமைத்துத் தினம் தினம் குளித்து, இறைவனைத் தோத்தரித்துச் சமையற்கட்டிற் புகுந்தனர். பிள்ளைகளையும் நெறிப்படுத்தினர். உண்கலம், குடிகலம் புனிதமாக்கிப் பாவித்தனர். சைவ ஆசாரங்ளில் ஒன்றாயமைந்தது ஆரதவுணவு. இது மேல் நாட்டாராலேயே இன்று பெரிதும் பேணப்படுகிறது. நல்ல இலைக்கறிகளைச் சைவம் சிபார்சு செய்தது. தூதுவளை, வல்லாரல், பொன்னாங்காணி, முளைக்கீரை, தொய்யில், சண்டி, பொன்னாவரசு, தவசிமுருங்கை, குறிஞ்சா, முல்லை, முசுட்டை, கறி(முள்) முருக்கிலை, அகத்தி போன்றன நல்ல சத்து நிறைந்தவை. இவ்வண்ணமே சுத்தபோசன ஆசாரம் மக்கள் பலரால் அநு சரிக்கப்பட்டன. திருநீறு, சந்தனம் குங்குமம் சிவ அடையாளம். சிலர் ஆசாரபூதிகளாயும் இருப்பர். இவ்வண்ணமே மனம் செவ்வியடைய அறவழியொழுக்கமும் ஆசாரமாம். பொய் களவு வஞ்சகம், சூது, பொறாமை, ஹிம்சை போன்றவற்றை விட்டு அன்பு, பண்பு, அறம், நீதி, இரக்கம், சேவை போன்ற மனித விழுமியங்களை வளர்த்துத் தம்மை இட்டுச் செல்லல், தீதொழிய நன்மை செயல் போன்றனவும் சைவம் கற்பித்த ஆசாரம் ஆகும்.

எனவே நம் சமயத்தோடு தொடர்பான நூல்கள், தத்துவ நூல்கள், நீதி நூல்கள், தர்க்கம், இலக்கணம், வேத இதிகாச சாரம், பெரியார் வரலாறு, உபதேசம் போன்றவற்றைக்கற்றும் பிறர் வாய்க் கேட்டும் நம்மை நல்லவர்களாய் அமைப்பதும் எம்மாசார நிலைப்பாட்டுக்கு உதவும். இவ்வண்ணம் நமது ஆசார அனுஷ்டானங்கள் சங்கற்பங்களுடன் உலகியலும் இணையும் போது எம்மை உலகவர் மதிப்பர். சைவம் வெறுமனே சடங்குகள் அன்று; தெய்வத்தோடிணைந்த ஆத்மார்த்த வளர்ச்சியும் நம் சமயத்தின் குறிக் கோளாகும். இவ்வண்ணம் சிந்திக்கும் போது நமக்கென்றோர் சமய ஆளுமை நம்மிடம் திகழ வேண்டுமாயின் நாம் அவ்வழி நடக்க வேண்டும். நமது வாழ்வியற் செம்மை நெறிகள் நாயன்மார், சந்தானாசிரியர்களால் வெளிக் கொணரப்பட்டன. எங்கு சென்றாலும், எத்தொழில் பார்த்தாலும், எம்மொழி பேசினும், நம் பாரம்பரியமான சைவ சமயத்தின் முக்கிய அம்சங்களான ஆசார அநுஷ்டானங்களை மேற் கொண்டு நல்ல சமயிகளாய் வாழ்வோம். சைவ சாதனங்ளைப் பேணுவோம். இதற்குச் சைவநீதி கலங்கரை விளக்கமாய்த் தொழிற்பட நால்வர் காட்டிய நெறி நடப்போம்.

# சமரச சுத்த சைவம்

- சைவநன்மணி செல்லப்பா -

சைவம் சிவசம்பந்தமானதெனப் பரவலாகப் பேசப்படுகிறது. சைவசமயத்தை வளர்ப்பதனால் மக்களிடம் சிவன் அருள் பெருகும் என நம்பப்படுகிறது. சைவ சமயத்தை வளர்ப்பதில் அதிக அக்கறையும் அபிமானமும் கொள்பவர்களிற் பலர் சிவ சம்பந்தம் என்பது மனசம்பந்தம் அல்ல என்பதை மறந்து மனவிகாரங்களுக்கு இடமளித்துச் சைவ சேவை புரிவதைக் காண்கிறோம். மனக்கற்பனை களினால் ஆக்கப்பட்ட கொள்கைகளுக்கும் சடங்குகளுக்கும் வழிபாட்டு முறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுதல் சிவசம்பந்தமான இறைபணி நிற்றல் என நம்புகின்றனர். இந்நிலையில் சைவசமய வளர்ச்சியின் வெற்றிச்சங்க நாதம் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் எங்கும் ஒலிக்கிறது; மின்னுகிறது; முழங்குகிறது. மழையோ மக்களுடைய இதயத் தாமரையிற் சிவனருள் பொழிவதையோ காணோம்.

பூவின் நறுமணம், மொட்டுக்கட்டு அவிழ்ந்து இயற்கையாகவே முதிர்ச்சியடைந்து மலர்ந்தாலன்றி எங்கும் பரிமளிக்காது. பூவிலுள்ள தேனை அதனைச் சுற்றி வட்டமிட்டு ரீங்கார ஓசை எழுப்பும் போது வண்டு அருந்த மாட்டாது. ஓட்டமும் ஆட்டமும் சத்தமும் இல்லாது அமைதியாகப் பூவில் உட்கார்ந்து இருந்துதான் அந்தத்தேனை அருந்த இயலும். இது இயற்கை நியதி. இதுவே சமரச சுத்த சைவம் விளக்கும் தூய அறநெறியாகும். இத்தகைய சிவ அறநெறி நின்று பெறப்படுவதே சிவஞானபோதம் ஆகும். சன்மார்க்க நெறியாகும். இதைத் தெளிவுபடுத்தும் திருமந்திர அருட்பாடல் .

*சத்தமுஞ் சத்த மனனுந் தகுமனம்*
*உய்த்த உணர்வும் உணர்த்தும் அகந்தையுஞ்*
*சித்தமென் றிம்மூன்றுஞ் சித்திக்குஞ் செய்கையுஞ்*
*சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே!*

சிவசம்பந்தம் யாது? என்பதன் முழுமையான உண்மை விளக்கம் பெற வேண்டின், சத்தம் இடுகின்ற இந்த மனவிகாரங்களின் செயற்பாட்டை மனச் சார்பற்ற நிலையில் இருந்து மௌனமாக ஆய்ந்து உணருதல் வேண்டும். இக்கட்டுரையை வாசிப்பவர்கள் மன எறிவைச் செய்து மதஅபிமானங் கொண்டு வெறுங் கொள்கைகளை விருத்தி பண்ணிப் படிப்பார்களாயின் மெய்ப்பொருள் காண்பது அரிதாகும். சுத்த சைவத்தைச் சிதறடிக்க நேரிடும். சமரச சுத்த சைவத்தைப் பற்றி மிகவும் தெளிவாகச் சந்தேகத்துக்கு இடமின்றி ஆணித்தரமாகத் திருமூல நாயனாரைப் போல உண்மை விளக்கம் கொடுத்தவர் எவருமில்லையெனத் துணிந்து கூறலாம். சைவம் எடுத்தாள்வது அத்துவித உண்மையையாகும். அதைச் சைவம், சிவோகம் என்னும் தெய்வீக மந்திர மூலம் தெளிவுபடுத்துகிறது. அத்துவித உண்மையை வேதாந்தமும் எடுத்தாள்கின்றது. "தத்துவம்அசி" என்னும் மகாவாக்கியத்தின் மூலம் வேதாந்தம் அத்துவிதத்துக்கு விளக்கமளிக்கிறது. "சிவோகம்" என்பதன் மெய்ப்பொருள் "நான் சிவம் ஆகிறேன்" என்பதாகும். "தத்துவம் அசியின் உண்மைப் பொருள் "நீ அது ஆகிறாய்" என்பதாகும். "அது" என்னும் பதம் குறிப்பது பரம்பொருளையாகும். அதையே சிவம் எனச் சைவம் வழங்குகிறது. திருமூலர் அதுவும் சிவமும் ஒன்றேயாகும் என வேதாந்தத்துக்கும் சைவத்துக்கும்

சம அந்தஸ்துக் கொடுத்து விளக்கம் அளிப்பதே சமரசமாகும். இதன்தெளிவான வியாக்கியானம் கொடுப்பது அத்துவிதம் ஆகும். இப்பகுபதம் அ + துவிதம் என இரண்டு பகுதியை உடையது. அ + துவிதம் – இரண்டு அற்றது என்னும் பொருள் தருவது.

இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தும் அற்புதமான அருள் மந்திரப் பாடலைப் படித்துப் பாருங்கள்.

*துவந்தத் தசியே தொந்தத் தசியும்*
*அவைமன்னா வந்து வயத்தேக மான*
*தவமுறு தத்துவம் அசிவே தாந்த*
*சிவமாம் அதுஞ்சித் தாந்தவே தாந்தமே !*

சுத்த சைவமானது வேதாந்தசித்தாந்த சமரச நோக்குடையதென்பதை உணராத சில சைவ மதத்தீவிரவாதிகள் வேதாந்தத்தை ''மிண்டிய மாயாவாதம்'' உடையதென வெறுத்து ஒதுக்கு கின்றனர். இவர்கள் தம் மனக் கற்பனை களினால் ஆக்கப்பட்ட கொள்கைகளுக்கும் சடங்குகளுக்கும் முதலிடம் கொடுத்துக் கத்தித் திரிகின்றனர். சும்மா இருத்தல் இவர்களுக்குச் சங்கடமாகும். வீண் விவாத்த்தை விட்டுச் சமரச சுத்த சைவத்தைத் திருமந்திரத்தை ஆதாரமாகக் கொண்டு மேலும் ஆய்ந்து வேண்டிய விளக்கம் பெறுவோம். சமரச சன்மார்க்கத்தை அனுசரித்துச் சிவஞானபோதமும் வீடுபேறும் பெற விரும்பும் சாதகர்கள் அவற்றைப் பற்றிய மனவாசக விளக்கம் பெறுவதுடன் நிற்றல் போதாது. ஏனெனில் எந்த ஒரு மனவாசக விளக்கமும், விளங்கப்படுத்தப்படும் மெய்ப் பொருள் ஆகாது. மனச் சார்பு நிலை கடந்து, திருவருள் கொண்டு மாசறு காட்சியாகக் காணக் கூடியதே சத்திய – சிவதரிசனமாகும். மனம் மாசுபடாமல், எண்ணங்களை விருத்தி செய்யாது மௌனமாக இருக்கும் போதுதான் அது திருவருட் சக்தியைப் பெறுவதற்கு உரிய பாத்திரமாகும். அது சதா இயங்கிக் கொண்டிருக்குமாயின் அதனால் திருவருட் சக்தியைப் பெறுதல் இயலாது.

மனம் உணர்ச்சி வசப்படும் போது நடுக்கம் அடைகிறது. இங்ஙனம் நடுக்கம் உள்ள மனத்தால் ஒருபோதும் மாசறு காட்சி பெறுதல் முடியாது. இவ்விடத்தில் மன உணர்ச்சிக்கும் மெய் உணர்தலுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைத் திட்டவட்டமாகத் தெளிதல் மிகவும் அவசியமாகும். மன உணர்ச்சி வசப்பட்ட சாதகன் ஒருவன் நடுக்கத்துடன் ஆவேசஉருக் கொண்டு ஆடுவான். மெய்யுணர்தலின் வசப்பட்ட துறவி ஒருவன் எவ்வித நடுக்க ஆவேசமும் இன்றி அமைதியாகச் சும்மா இருப்பான். இவ்விருவரில் யாரிடம் திருவருட் சக்தி பொலிவுறும்? யாரிடம் மாசறு காட்சி உண்டாகும்? என்பதை வாசகர்களே அவதானித்துக் கிரகித்துத் தெளிந்து கொள்ளவும். இதைத் திருமந்திரம் படம் பிடித்துக் காட்டுவதைப் பாருங்கள்.

*வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்த*
*நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்*
*பூதாந்த போதாந்த மாகப் புனஞ்செய்ய*
*நாதாந்த பூரணர் ஞானநே யத்தரே!*

''இப்பாடலில் வரும் ''நாதந்தமும் நடுக்கற்ற காட்சியும் எமது ஆய்வுக்குரியதாகும். நமது செவியினாற் கேட்டு உணரக்கூடிய நாதம் அதிர்வுகளைக் (Nilrations) கொண்டதாகும். இதன் வசப்பட்டவர்களைத்தான் திருமூலர் நடுக்கம் உற்றவர்கள் என எதிர் மறையாக விளக்குகிறார். இவர்கள் தாம் உணர்ச்சி அடைந்தவராவர். நாதந்தம் என்பது தூல நாதத்தைக் கடந்த – செவிக்கு எட்டாத

– நடுக்கம் அற்ற – சூக்கும – மிகவும் நுண்ணிய அருள் நாதத்தைக் குறிப்பதாகும். இந்த அருள் நாதத்தை மெய்யுணர்தல் மூலம் தெளிபவர்களையே திருமூலர் நடுக்கற்ற காட்சியர் எனக் கூறுகிறார். இவர்கள் மன உணர்ச்சி வசப்பட்டு உருக் கொண்டு ஆடுவதுமில்லைப் பாடுவதும் இல்லை. மௌனகீதமே அவர்களின் சொரூபமாகும்.

இவ்விடத்தில் ஒரு முக்கியமான விடயத்தை விழிப்புணர்வுடன் அவதானித்து விளங்க வேண்டியுள்ளது. மெய்ஞானியர்களும் சமய குரவர்களும் திருவருட் சக்தியை முறைப்படி பெற்ற பின்பு அருட்பாக்களை இயற்றிப் பாடி மகிழ்ந்தார்களா அல்லது தமது பாட்டுத் திறமையினால் இறைவனை வசப்படுத்தித் திருவருளைப் பெற்று மகிழ்ந்தார்களா? என்பது சாதகர்கள் விசாரணை செய்து உணர வேண்டியதாகும். அருள்பெற்ற அடியார்களுக்கு இறைவனே முதல் அடியெடுத்துக் கொடுக்க அருட்பாக்களைப் பாடியதாகப் புராண வாயிலாக அறிகிறோம். இன்று பெரும்பாலான அடியார்களின் நிலை மாறி விட்டது. அருட்பாக்களைப் பக்க வாத்தியங்களுடன் திரும்பத் திரும்பப் பாடுவதனால் இறைவனைச் சங்கீதத்தில் மயங்க வைத்துத் திருவருளைப் பெற்றுத் தமது காரியங்களில் வெற்றி பெறலாம் என நம்பிச் செயற்படுகின்றனர். குதிரைக்குப் பின் கட்ட வேண்டிய வண்டியை அதற்கு முன் கட்டிப் பிரயாணம் செய்ய முற்படுகின்றனர். இவர்கள் முதன்மையாகத் திருவருள் பெற்ற பின்பு திருமூலர் பாடிய திருமந்திரத்தை வழுவற உணருதல் பயனுடையதாகும். அதுவும் "நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்" என்பதை ஓதிச் சரிவர உணர்தல் அவசியமாகும்.

திருவருளை முழுமையாகப் பெறுவதற்குச் சிறந்த நெறி நிவிருத்தி மார்க்கமாகும். நிவிருத்தி மார்க்கம் என்பது ஆத்மாவைப் பீடித்துள்ள மூன்றுமலங்களையும் சுத்தம் செய்யும் வழிகளைக் காட்டுவதாகும். மலங்களாற் பீடிக்கப்பட்ட உயிரைப் பாசிபிடித்த குளத்துக்கும் களிம்பு பிடித்த பித்தளைக்கும் உவமை கூறப்படுகிறது. பாசிக்குளத்தில் கல்லைத்தூக்கிப் போட்டால் சொற்பநேரம் பாசியானது விலகி அதற்கு வழிவிடுகிறது. மீண்டும் பாசி மூடிக் கொள்கிறது. அதனால் தண்ணீர் மறைக்கப்படுகிறது. நாம் செய்யும் புறப் பூசைகளும் சடங்குகளும் வழிபாடுகளும் பாசிக்குளத்தில் கல்வீசுவது போலாகும். அவற்றால் ஆத்மாவைப் பீடித்த ஆணவம், கர்மம், மாயை, ஆகிய மூன்றுமலங்களும் நீங்குவதில்லை. ஏதோ சொற்பம் விலகிய பின்பு மீண்டும் பற்றிக் கொள்கின்றன. திருமூலர் கூறும் சுத்த சைவம் தற்காலிகமான மல நீக்கமுறைகள் எதையும் கூறவில்லை.

பித்தளையைப் பற்றிய களிம்பைத் தற்காலிகமாக நீக்கினால் அது ஒளியிட்டுப் பிரகாசிக்கும். ஆனால் அந்தப் பிரகாசம் நீடிப்பதில்லை. அதனால் பித்தளைப் பாத்திரங்களை ஒவ்வொரு நாளும் விளக்க வேண்டியுள்ளது. எப்படித் துலக்கினாலும் பித்தளை பித்தளைதான். அதைப் பொன்னைப் போலாக்குதல் இயலுமா? கவலை வேண்டாம். பித்தளையை பொன்னாக மாற்றும் இரசவாதிகள் போலச் சிவன், மலத்தால் மறைக்கப்பட்டுள்ள சீவனைப் புடம் இட்டுப் பொன்போலச் சுத்த ஆத்மா ஆக்கும் வல்லமை யுடையவர். அதற்கு வேண்டிய சாதனா முறைகளைக் காட்டுவது சுத்தசைவமாகும். அவற்றைப் பாச நீக்க முறைகள் எனவும் கூறுவதுண்டு. உடன்பாட்டு நிலையிற் செய்யப்படும் சாதனைகள் எதையும் நிவிருத்தி மார்க்கத்தில் சுத்த சைவர்கள் செய்வதில்லை. அவர்கள் புரியும் சாதனைகள் அத்தனையும் எதிர்மறை நிலையில் பாசநீக்கத்தையே அடிப்படையாகக் கொண்டனவாகும்.

இந்த உண்மை விளக்கத்தை ஆதாரமாகக் கொண்டு சுத்த சைவம் சுட்டிக்காட்டும் முக்கியமான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சாதனா மார்க்கங்களைப் பற்றி ஆய்ந்து தெளிந்து உரிய முறைகளைத் தவறாது அனுட்டித்தல் எமது கடமையாகும். இந்த நான்கு சாதனைகளைப் பற்றி ஏராளமான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றிச் சொற்பமேனும் அறியாத சைவர்கள் இல்லை எனலாம். ஆனால் இச்சாதனைகள் நிவிருத்தி முறையில், எதிர்மறை நிலையில் அனுட்டிக்கப்பட வேண்டியவை என்பதைத் தெளிந்து செயற்படுவோர் ஆயிரத்துக்கு ஒருவராவார். ஏனையோர் இவற்றை உடன்பாட்டு நிலையில் விருத்தி முறையில் அனுட்டிப்பதையே காண்கிறோம். விருத்தி நிவிருத்தி என்பதன் மெய்ப் பொருளைக் கூடச்சரிவரத்தெளியாத பல சைவர்கள் உள்ளனர். ஆனால் சரியை, கிரியைகளை ஒழுங்காகச் செய்து வருவதாகக் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்வர். அவற்றை அனுட்டிக்காதவர்களை அசைவர் எனக் கேலிசெய்வர்.

நிவிருத்தி நிலையில் அனுட்டிக்கப்படாத சரியை, கிரியை, யோக, ஞானம் சுத்த சைவத்துக்கு உரியன அல்ல என்பதைத் திருமந்திரம் வலி உறுத்துவதைக் காண்கிறோம். நிவிருத்தி விருத்தி என்னும் எதிர்ச் சொற்களின் மெய்ப் பொருள் உணராது சரியை கிரியை முதலியவற்றை அனுட்டித்தல் பயனற்றதாகும். எனவே நிவிருத்தி விருத்தி ஆகிய எதிர்ச்சொற்கள் குறிக்கும் பொருளை ஆய்ந்து பார்ப்போம். இந்த இருபதங்களும் உளவியல் சம்பந்தமானவையாகும். மனத்தின் இயல்பு சதா இயங்கிக் கொண்டிருத்தலாகும். எண்ணங்களை அல்லது சிந்தனைகளைப் பெருக்கிக் கொண்டே அது இயங்குவதாகும். இத்தகைய சிந்தனைப் பெருக்கத்தையே விருத்தி எனச் சைவசித்தாந்தம் சுறும். நிவிருத்தி என்பது மனச் சிந்தனைகள் அற்ற அமைதியான சாந்த மௌன நிலையாகும். மனவிருத்தி நிலையிலேதான் மக்கள் இருவினை செய்கிறார்கள். இவ்வினையாலேதான் மக்கள் இருவினை செய்கிறார்கள். இருவினையாலே தான் பந்த பாசம், இறப்பு பிறப்பு புண்ணிய பாவம், இன்பதுன்பம் யாவும் ஏற்படுகின்றன. எனவே மனவிருத்தி நிலையில் செய்யப்படும் சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய சாதனைகள் ஆத்மாவுக்குப் பந்த பாசங்கள் மும்மலங்கள் என்பவற்றிலிருந்து ஒரு போதும் விடுதலை அளிக்கமாட்டாவென்பது நன்கு புலப்படுகிறது. சரியை மார்க்கத்திற் சரிவர நின்று மோட்ச நிலை பெற்ற திருநாவுக்கரசு நாயனார் அருளிய "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அருள் வாக்கு மெய்ப் பொருள் உணர்ந்து சரியா மார்க்கத்தை அனுட்டிப்பதற்கு உரியதாகும்.

"பணி செய்து கிடப்பது" என்பதன் மறை பொருள் தொண்டு செய்பவர்கள் இருவினைக்கு உட்படாமல் மன விருத்தி செய்து பலாபலன்களை எதிர் பாராமல் சும்மா இருத்தல் வேண்டும் என்பதாகும். கோயிலில் நேர்த்திக் கடன் வைத்துச் சரியா மார்க்கத்தை அனுட்டிப்பவர்கள் பணி செய்து கிடப்பதில்லை. நான்குமார்க்கங்களில் எதை எவர்விரும்பி அனுட்டித்தாலும் சரி மன நிவிருத்தி ஏற்படும் வகையில் செய்தலே உத்தமத்தில் உத்தமமாகும். சமரச சுத்த சைவர்கள் கடைப்பிடிக் வேண்டிய மோட்ச சாதனா முறைகளைத் தெளிவுபடுத்தும் திருமந்திரப் பாடல் ஒன்று.

*வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி*
*ஆடம் பரமின்றி ஆசாபா சஞ்செற்றுப்*
*பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்*
*சாடுஞ் சிவபோ தகர்சுத்த சைவரே!*

இவ்வருட் பாடல் நிவிருத்தி மார்க்கத்தை வழுவற விளக்குவதை ஓதி உணர்ந்து பணி செய்து கிடத்தல் எமது கடமையாகும்.

# கண்ணப்ப நாயனார்

தருமத்திற்குத் தெய்வம் இடபமானது. இடபம் சிவபிரானுடைய ஊர்தி. அப்பணி சடையோன் முறுவலால் முப்புரம் முடிந்தது. ஆதியார் வேதவாய்மைக் காவலர். திருக்காளத்தியில் கண்ணப்பருக்குச் சிவகதி அருளினர். கண்ணப்பர் பொத்தப்பி நாட்டினர். பொத்தப்பி, பூவலரும் பொய்கையும் சோலையும் சூழ்ந்தது. நல்வளம் பெருகி நிற்பதால் நாவலர் நாளும் போற்றுவர்.

உடுப்பூர் பொத்தப்பி நாட்டுப் பழம்பதி. கண்ணப்பர் திருப்பதி அது. யானைத் தந்தங்களால் அங்கு வேலி கோலுவார்கள். மலைவாணர்கள் மகிழ்ந்து உறைவார்கள். அவர்களுக்கு நாகன் அதிபதி.

நாகனின் வாழ்க்கைக்குரியவள் தத்தை. இருவரும் முருகப் பெருமானுடைய முன்றிலில் நாளும் வழிபட்டு வந்தார்கள். சூர் உரம் கிழித்த கார் மயில் வாகனன் கருணை புரிந்தான். தத்தை மகவு பெற்றாள். நாகன் குழந்தையைக் கையில் எடுத்தான். 'திண்' என்று இருந்தது. 'திண்ணன்' என்று பெயரிட்டான். திண்சிலை வேடர் திண்ண என்று கூத்தாடினார்கள். குதூகலித் தார்கள். கண்ணின் மணிபோலக் காதலித்தார்கள்.

*குலமுது குறத்தி நலம் பேணி வளர்த்து வந்தாள். சிலமுறை ஆண்டு சென்றது. விற்பயிற்சிக்கு உரியரானார்.* "பல்பெருங் கிளைஞர் போற்றப் பராய்க்கடன் பலவுள் செய்து வில்விழா எடுக்கவென்று, விளம்பினான் வேடர் கோமான். ஏழுநாள் எழுச்சி விழா எடுத்தார்கள். வேடுவர்களும் வேடுவிச்சிகளும் உண்டு உடுத்துக் கொண்டாடினார்கள். பின்னர் திண்ணனாரைப் போர்வில்லைப் பிடிப்பித்தார்கள்.

"மற்றை நாட்டொடங்கி நாளு மடற்சிலை யாண்மை முற்றக் கற்றன னென்னை யாளுங் கானவர்க்கரிய சிங்கம்...." என்று விற்றொழில் கற்ற சிறப்பை, அகங்குழைந்து மொழிவார் அருண் மொழியார். திண்ணனார் பதினாறாண்டுப் பிராயம் எய்தினர்.

நாகன் வயது மூத்தான். நிலை தளர்ந்தான். வரையாட்சியை மைந்தனுக்கு வழங்கினான். மரபு உரிமை தாங்குவதற்கு உடைதோல் சுரிகையைத் திண்ணனார் ஏற்றுக் கொண்டார். "நீ விரைந்து வேட்டையாடச் செல்வாய். வல்வில் வேடரோடு எழுக. என்று நாகன் விடை ஈந்தான். திண்ணனார் வேட்டைக் கோலம் புனைந்தார். தேவராட்டி வாழ்தினாள். வில்லினைக் கையில் ஏந்தினார். வேட்டைத் தொழிலின் மேற் புறப்பட்டார். வேடர் கூட்டம் காடு கொள்ள எழுந்தது.

*'ஓடியெ றிந்து வாரொ முக்கி யோச னைப்ப ரப்பெலாம்*
*நெடிய திண்வ லைத்தொ டக்கு நீளி டைப்பி ணித்துநேர்*
*கடிகொ ளப்ப ரந்த காடு காவல் செய்த மைத்தபின்'*

வேட்டைத் தொழில் மும்முரமாக நிகழத் தொடங்கியது. பன்றி ஒன்று விசையோடு ஓடியதைத் திண்ணனார் கண்டார். திண்ணனார் பின் தொடர்ந்து ஓடினார். நாணனும் காடனும் பின்தொடர்ந்து திண்ணனாரைக் கூடினார்கள். இளைத்த பன்றி மரச்செறிவில் நின்றது. திண்ணனார் வாளை உருவிக் குத்தினார். பன்றியின் உடல் இரு பிளவாகியது.

*''ஆண்மகன் கொன்றான். அச்சோ! என்றான் நாணன்.*
*"இதனைக் காய்ச்சி நீ சாப்பிடு. நாங்களும் தின்போம்,"*
*"தண்ணீர் எங்கே உளது? "என்று திண்ணனார் கேட்டார்.*
*" அங்கே பொன்முகலி ஆறு ஓடும்" என்றான் நாணன்.*
*"அங்கே செல்லுவோம்.*
*''நல்ல காட்சியே அங்கு காண்பாய். திருக்காளத்தி மலை மீது குடுமித் தேவர் இருப்பார். கும்பிடலாம். "என்றான், நாணன்.*

திருமுகலியின் கரையிற் சேர்ந்தார்கள். காடனைப் பன்றியைப் பதம் பண்ணப் பணித்தார். திண்ணனார் நாணனுடன் மலைச்சாரலை அடைந்தார். நீண்மலை ஏறி நேர்படச் சென்றார். காளத்தியாரின் திருவருட் பார்வை திண்ணனார் மீது பட்டது. "பொங்கு ஒளி நீழலில் அன்பே உருவமானார், திண்ணனார்.

"நீரிங்கு தனியே இருக்கலாமோ........ என்று மலர்க் கண்களில் அருவி பாய மூழ்கினார். பச்சிலையோடு பூவும் நீரும் கண்ணிற்பட்டது. நாயனாருக்கு இனிய செய்கை இவையே என்று எண்ணினார். அண்ணலாரின் பசிக்கு ஆற்றாதவராகி ஆற்றங்கரைக்கு வந்தார்.

"இவன் அங்கு பொந்தினை விட்டுப் போகாத வல்லுடும்பானான். இங்கும் வந்தான். தேவருக்கு இறைச்சி எடுத்துப் போக. '' என்று நாணன் காடனுக்கு நவின்றான். ''திண்ணனைத் தெய்வ மயக்கம் பற்றிக் கொண்டது. நாகனுக்கு நடந்ததைத் சொல்லுவோம்.'' என்று இருவரும் வேட்டைக் கானுக்குச் சென்றார்கள்.

வேடுவர் சென்றதை வேடனார் உணரார். ஊனமுது அமைத்தார். தூயவாயினில் நன்னீர் கொண்டார். தூநறும் பள்ளித்தாமம் தலையினிற் துதைய ஏற்றார். திண்ணனார் வெற்பை நண்ணினார்.

மலைமேல் மருந்தின் மலரைச் செருப்பால் மாற்றினார். அன்பை உமிழ்வது போல வாயின் நீரை முடிமேல் விட்டார். பள்ளித் தாமத்தை வணங்கிச் சாத்தினார். ஊனமுதை முன்னே வைத்தார். "நாவினிற் சுவையும் பார்த்தேன். நன்றாக இருந்தது. நாயனீரே! அமுது செய்தருளும்." என்றார். இரவு முழுவதும் காவல் புரிந்தார். காலையானதும் கடவுளுக்கு அமுது கொணரச் சென்றார்.

சிவகோசரியார் சிவாகம வழிபாடு செய்ய வந்தார். அனுசிதங் கண்டு அஞ்சினார். அலமந்தார் பவித்திரமாம் செயல் புரிந்தார். அர்ச்சனை செய்தார். ஆச்சிரமம் சென்றடைந்தார்.

வனமுறை வேடர் விரைந்து வந்தார். அந்தணனார் பூசனையை முன்போல அகற்றினார். அன்புப் பூசையை ஆற்றினார். நாகன் தேவராட்டியோடும் வந்தான். திண்ணனார் மனம் திரும்பவில்லை. தந்தையும் கைவிட்டுப் போனான்.

அன்புப் பூசையை அறியாமல் அந்தணனார் மனக் கவலை கொண்டார். மாமுனிவரின் மனக்கவலையை மாற்ற மறைப் பொருளார் கனவில் அருளிச் செய்வார்.

"நீ நாளை ஒளித்திரு. அவன் என்னிடத்தில் வைத்த அன்பைக் காண்பாய் '' எனத் திருவாய் மொழிந்தார். சிவகோசரியார் பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார்.

திண்ணனார் அன்புப் பூசைக்கு ஆவனவற்றைத் தேடிக் கொண்டு வந்தார். மலைமேல் மாணிக்கம் மலர்க் கண்ணில் ஒன்று உதிரம் ஒழுக இருந்தார். சகுனம் சரியில்லாமல் சஞ்சலத்தோடு வந்தவர் குருதி கண்டார். கையறவோடு குருதியைத் துடைத்தார். குருதி நீங்கக் காணார். கண்ணீர் வார

நிறைமலர்ப் பாதங்களைப் பற்றினார், கத்தினார், பதறினார். "என்ன செய்தால் தீருமோ ....... என்று சிந்தித்தார். "அம்புப் புண்களைத் தீர்க்கும் மருந்துகள் தேடி வருவேன்'' என்று ஓடினார். புனத்தில் மருந்துகளைப் பறித்து வந்தார். பிழிந்து வார்த்தார். குருதி குறைவு படாமை கண்டார். "ஊனுக்கு ஊன் உற்ற நோய் தீர்ப்பது'' என்று உணரப் பெற்றார். உடனே கண்முதலைக் களைந்து காளத்தியாரின் திருக் கண்ணில் அப்பினார். புண்ணீர் நிற்கக் கண்டார்.

"என்புத்தி நன்று" என்று ஆடினார். பாடினார்

கண்ணுதலார் கண்ணப்பனாரின் அயல் அறியா அன்பின் ஆழத்தை மேலும் உணர்த்தத் திருவுளங் கொண்டார். இடக் கண்ணின்றும் இரத்தம் பாய இருந்தருளினர். "இதனுக்கு அஞ்சேன்.'' திண்ணனார் இடக்காலைத் திருக் கண்ணில் ஊன்றினார். அம்பைத் தமது கண்ணில் ஊன்றினார்.

தேவதேவர் பொறுத்திலர். "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப. நில்லு கணணப்ப. '' என்று அங்கணர் அமுதவாக்குத் தடுத்தது. இன்னுரையோடு எழிற் சிவலிங்கத்தில் மலர்க்கை பிறந்தது. அம்பொடு கையை அகப்படுத்தருளினர். சிவகோசரியார் கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டார். கசிந்து விண்டனர் கண்ணீர்.

வானவர் மலர்மழை பொழிந்தனர். பஞ்ச துந்துபி கறங்கின. முனிவர்கள் துதித்தார்கள். நான்முகன் முதலாம் தேவர்கள் வேதநாதம் முழக்கினார்கள்.

*"அன்பனே! என் வலப்பால் வருக" அருள் வாக்கு எழுந்தது. திருக்கண்ணப்பர் சிவகதி பெற்றனர்.*

---

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி | 1 | 13.02.99 | சனி | மாதப்பிறப்பு, சனிப்பிரதோஷம் |
| | 2 | 14.02.99 | ஞாயிறு | மகா சிவராத்திரி |
| | 3 | 15.02.99 | திங்கள் | அமாவாசை விரதம் |
| | 5 | 17.02.99 | புதன் | கோச்செங்கட் சோழர் குருபூசை |
| | 7 | 19.02.99 | வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| | 9 | 21.02.99 | ஞாயிறு | ஷஷ்டி விரதம் |
| | 10 | 22.02.99 | திங்கள் | கார்த்திகை விரதம் |
| | 12 | 24.02.99 | புதன் | கச்சியப்ப சிவாசாரியார் குருபூசை |
| | 14 | 26.02.99 | வெள்ளி | ஏகாதசி விரதம் |
| | 15 | 27.02.99 | சனி | சனிப்பிரதோஷ விரதம் |
| | 16 | 28.02.99 | ஞாயிறு | நடேசரபிஷேகம் |
| | 17 | 01.03.99 | திங்கள் | பூரணை விரதம், மாசிமகம் |
| | 20 | 04.03.99 | வியாழன் | எறிபத்தர் குருபூசை |
| | 21 | 05.03.99 | வெள்ளி | சங்கடஹர சதுர்த்த விரதம் |
| | 28 | 12.03.99 | வெள்ளி | காரியார் குருபூசை |
| | 29 | 13.03.99 | சனி | ஏகாதசி விரதம் |
| | 30 | 14.03.99 | ஞாயிறு | காரடையார் நோன்பு; ஷடசீதி புண்ணிய காலம் இரவு 1.41 முதல் |

திருவிளையாடற்புராணம்

# மலயத்துவசனை அழைத்தமை

- கூடலான் -

வேதங்களினாலும் அளவிடப்பட முடியாத முழுமுதலாகிய சிவபெருமான் பாண்டிய மன்னனாகிச் செங்கோல் செலுத்தும் நாளில் இருடிகள் அவரை முறையோடு சந்திக்க வருவர். அவ்வண்ணம் ஒருமுறை கௌதம முனிவர் சந்தித்துத் திரும்பும் போது காஞ்சனமாலையிடம் சென்றார். அவரை எதிர்கொண்டழைத்து வேண்டியவகை உபசரித்து வணங்கிச் "சுவாமி அடியேனுடைய பிறவித் துன்பத்தை நீக்கவல்ல தவம் எது? அருளுக!" என்று விண்ணப்பஞ் செய்து நின்றார்.

கருணையின் உறைவிடமாகிய கௌதமர் திருமுகமலர்ந்து மலயத்துவச பாண்டியனுக்கு வாய்த்த பெருங்கற்பினையுடைய பத்தினியே! நீ உலக மாதாவாகிய தடாதகைப் பிராட்டிக்கு மாதாவாயினாய். பிரம விஷ்ணுக்களாலேயே அறியப்படாத சிவபெருமானை மருமகனாகப் பெற்றுள்ளாய். நீ அறியாத தவம் இங்கு வேறு யார் அறிவார்? ஆயினும் சொல்லுவோம். தீர்த்த யாத்திரை செய்வது தீர்த்தங்களில் நீராடுவது, திருப்பணிகளை நிறைவு செய்வது உயர் பயன் தரக் கூடியவை எனக் கொள்ளலாம்" என்றார். அவற்றுள்ளும் கங்கை முதலிய புனித நீர் நிலைகளில் நீராடுவது சாலச் சிறந்தது. நதிகளைத் தனித் தனியாக அடைந்து தீர்த்தமாடுவதினும் பார்க்க எல்லா நதிகளும் சங்கமமாகும் சமுத்திரத்திலே நீராடுவது மிகமிக மேலானதாகும்", என்றார்.

அது கேட்ட காஞ்சனமாலை சமுத்திர ஸ்நானத்தில் மிக்க விருப்பு உடையவளாகித், தன் கருத்தினைத் தன் புதல்வியாகிய தடாதகைப் பிராட்டியாரிடம் தெரிவித்தனர். பிராட்டியார் உள்ளந் தளர்ந்து தன் கணவனிடம் இந்தச் செய்தியை விண்ணப்பித்தார். சமுத்திரம் ஒன்றா! ஏழு சமுத்திரங்களையும் அழைப்போமென்று திருவுளங் கொண்டருளினார் சுந்தர பாண்டியர். உடனே ஏழு கடல்களும் கீழ்த்திசை ஒரு வாவியினிடத்தே ஏழு வண்ணத்தோடும் வந்தடங்கின.

அந்த வாவிக் கரையிலிருந்த நந்தவனத்திற்குப் பிராட்டியாரோடு எழுந்தருளிய சுந்தரபாண்டியர் தன் மனைவியிடம், "உன் பொருட்டு ஏழு கடல்களையும் வரச் செய்துள்ளேன். ஸ்நானம் பண்ணும் பொருட்டு உன் அன்னையை அழைத்து வருவாயாக" என்றார். பிராட்டியாரால் அழைத்துவரப்பட்ட காஞ்சனமாலை, சமுத்திர தீர்த்தமாடல் செய்யும் முறைமையைச் சற்பிராமணர்களிடம் விசாரித்தார். கணவன் கை, அல்லது புத்திரன் கை, அல்லது பசுக்கன்றின் வால் என்பவற்றுள் ஒன்றைக் கையினாற் பற்றிக் கொண்டு ஸ்நானஞ் செய்தன் முறை என்றனர் பிராமணர். கேட்ட காஞ்சனமாலை மகளிடந் தன் தவக் குறைவை எடுத்துச் சொன்னாள். பாவியேனுக்குக் கணவனுமில்லை; புத்திரனுமில்லை; பசுக்கன் றொன்றுதான் எனக்குத் தஞ்சம், என்று நொந்த உள்ளத்துடன் சொன்னாள். எம்பெருமாட்டி தன் மாதாவின் குறையை நாயகன் திருமுன் விண்ணப்பஞ் செய்தாள். சுவர்க்கத்தில் இந்திரனோடு ஒருங்கிருந்த மலயத்துவசனை எம்பெருமான் திருவுளங் கொண்டார். சிவபெருமானுடைய திருவுளப்படி பாண்டியன் விமானமொன்றின்மேலேறி ஏழ்கடலும் நிறைந்த வாவிக் கரையிலே "மனோ வாக்குக்கெட்டாத பரமானந்தப் பழங்கடலை, யான் பொன்போற் போற்றினதாற் பெற்ற பெரும்பயன் இது" என்று எதிர்கொண்டு திருவடிகளை வணங்கும் பொருட்டு வந்தார். அவர் வருகைக்கு முன்னே சுந்தர பாண்டியர், தன் மாமன் என்னும் முறையினால் மலயத்துவசபாண்டியனைத் தன் திருக்கரங்களினால் அணைத்துத் தழுவி திருவருணோக்கஞ் செய்து "மனைவியுடன் தீர்த்தமாடுவாயாக," என்றார். தன் முன்னைப் பெருந் தவத்தினாற் பெற்ற தடாதகைப் பிராட்டியார் வந்து தழுவத் தானுந் தழுவி அளவிலா மகிழ்ச்சியடைந்தான் மலயத்துவசன்.

காஞ்சனமாலை நாணத்தோடு தன் கணவன்முன் சென்று வணங்கி பிராமணர் முன்னே சங்கற்பஞ் செய்து கணவன் மலயத்துவச பாண்டியனது கையைப் பற்றிக் கொண்டு பேருவகையோடு சமுத்திர ஸ்நானஞ் செய்தாள். பாண்டியனுங் காஞ்சனமாலையும் ஸ்நானஞ் செய்து கரையேறியவுடனே, சிவபெருமான் திருவருளினால் அவர்களுக்குரிய திருவுருவைப் பெற்றனர். சிவலோகத்தினின்றும் ஒரு தேவ விமானம் இழிந்து வந்தது. திருவருட்டுணையுடன் அவ்விமானத்தில் ஏறிச் சோமசுந்தரரை அணுகி வணங்கிச் சிவலோகத்தைஅடைந்தனர்.

*ஆதாரம் : நாவலர் திருவிளையாடற்புராண வசனம்.*

# விளக்கு

- திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் -

மனிதனுக்குத் துன்பஞ் செய்கின்றவை பல. அவற்றுள் இருள் ஒன்று. இருளில் கட்டையா? கள்வனா? காலில் பட்டது சந்தனமா? சாணமா? அரவமா? கயிறா? என்று அறிந்து கொள்ள முடியாது. இருளில் ஒருவேலையுஞ் செய்ய முடியாது. நடமாடவும் முடியாது. இரவில் நமது வீடுகளில் திடீரென்று மின்சார விளக்குகள் அணைந்து விட்டால் அப்படியே அத்தனைபேரும் அசைவற்று நிற்க நேர்கின்றது.

விளக்கு நமக்கு எத்தனை வண்ணமாக உதவி செய்கின்றது என்பதை நாம் அது இல்லாதபோதுதான் உணர முடியும். தாய் நம்மை எப்படி எப்படியெல்லாம் வளர்க்கின்றாள் என்பதைத் தாய் இல்லதபோதுதானே உணர முடிகின்றது.

ஒரு வீட்டில் விளக்கு எரிந்தால் அந்த வீடு மங்களகரமாக இருக்கும். விளக்கின்றி இருள் சூழ்ந்தவீடு, பேய் நடமாடும் பாழ் நிலம்போல் இருக்கும்.

பொருள்களை விளக்குகின்ற விளக்குகள் நான்கு எனவுணர்க. சூரியன், சந்திரன், அக்கினி, ஓசை என்ற நான்குமாகும். பகலில் பொருள்களை விளக்குவது கதிர், இரவிலே பொருள்களை விளக்குவது மதியுங்கனலும், இந்த மூன்றும் இல்லதபோது ஓசை நமக்கு உதவுகின்றது.

இரவிலே ஒரு காட்டில் இருளில் வழியுங் குழியும் தெரியாது ஒருவன் நின்று திகைக்கின்றான். அப்போது ஒரு புறத்தில் நாய் குரைத்தது அந்த ஒலியைக் கொண்டு மக்கள் வாழவேண்டும் என்று தெரிந்து ஒலி வந்த வழியே போவான். அன்றியும் தவளைகள் கர கரவென்று கத்தும் ஒலியைக் கேட்டான். அங்கு நீர்நிலை என்று அறிகின்றான். ஆகவே கதிர் மதி விளக்கு என்ற மூன்றும் இல்லாதபோது ஓசை நமக்கு உதவுகின்றது.

வீட்டிலேயுங்கூட இருளில் அசைவற்றுத் திகைக்கின்ற போது அங்கு யாராவது பேசினால் அந்தக் குரலோசையைக் கண்டு இன்னார் என்று விளங்கிக் கொள்ளுகின்றோம் அல்லவா? எனவே சொல்லே ஒரு விளக்கு ஆகும்.

"இல்லக விளக்கது இருள்கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது"

*– என்கிறார் அப்பர் அடிகள்*



Reg. No: QD/37/ News 99. இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
48B, புளூமெண்டோல் வீதி, கொழும்பு – 13. என்னும் முகவரியிலுள்ள
யுனி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 1999–01–20 இல் வெளியிடப்பட்டது.